விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 01.05.2021 சனிக்கிழமை | இதழ் : 151 | பக்கங்கள் : 16

## 11 கொரோனா மரணங்கள் நேற்று பதிவு

கொழும்பு, மே. 01

இலங்கையில் நேற்று மட்டும் 11 கொரோனா தொற்றாளர்கள் மரணமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் ஒரே நாளில் அதிகளவு கொரோனா மரணங்கள் பதியப்பட்டிருப்பது இதுதான் முதல் முறை. இதன்

15

## திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு இரு வாரங்களுக்குத் தடை விதிப்பு!

### கொரோனா தீவிரமடைவதால் அரசு அதிரடி

கொழும்பு, மே. 02

இலங்கையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் திருமண நிகழ்வுகள் உள்ளிட்ட மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகள் அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இரண்டு வார காலத்துக்கு இந்தத் தடை அமுலில் இருக்கும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இரா ணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டின் கொரோனா அபாய நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக இலங்கையில் நாளாந்த கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேல் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. தமிழ் - சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர்

15

# ஆபத்து நோக்கி நகர்கிறது நாடு!

### ஒரேநாளில் 1,636 பேருக்கு தொற்று

கொழும்பு,மே 01

கொரோனா தொற்று பரவும் வேகம் வெகுவாக அதிகரித்துள்ளமையால் இலங்கை பெரும் ஆபத்துக் கட்டத்தை நோக்கி நகர்வதாக சுகாதார தரப்பினர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

15

தொற்றிலிருந்து உலகம் விடுபட

## இந்த மாதம் முழுவதுமே செபமாலை சொல்லுங்கள்!

### யாழ். ஆயர் அழைப்பு



யாழ்ப்பாணம், மே. 01

அஞ்சாதே நான் உன்னுடன் இருக்கிறேன் (ஏசாயா 41:10) என்ற இறைவார்த்தையை மன திருத்தி கொரோனா தொற்றில் இருந்து உலகம் முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டி திருச் செபமாலை மாதமான மே மாதம் முழுவதிலும் யாழ். மறை மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் மற்றும் மரியன்னை யாத்திரைத்

15

## ‘பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை’ வழக்கை முடிவுறுத்தியது கல்முனை நீதிமன்று

கல்முனை , ஏப்.30

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணியாகச் சென்றமை தொடர்பாக மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு

15

## ரிஷாத்தை பாராளுமன்றுக்கு அழைத்து வருமாறு உத்தரவு

கொழும்பு, மே. 01

கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

15

3ஆவது அலை சவாலானது

## அடுத்த கட்டம் தொடர்பில் அரசாங்கம் தீர்மானிக்கும்

கொழும்பு, மே 01

கொரோனா பரவல் முதலாம், இரண்டாம் அலைகளை விட மூன்றாம் அலை சவால் மிக்கதாகவுள்ளது. எனவே, இதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினருக்கு சகலரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமால் லான்ஸா தெரிவித்தார்.

வத்தளை பிரதேச செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கூடிய

15

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## கேரளாவில் ரிஷாத்தின் தொடர்புகள் என்ன? இந்திய புலனாய்வு பிரிவினர் விசாரணை!

### நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ள புதிய தகவல்கள்

சென்னை, மே 01

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனிற்கும் கேரளாவிற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து கேரளா பொலிஸாரும் இந்திய புலனாய்வு பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் இதனை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் நியு இந்தியன் எக்ஸ்

15

## யாழ்ப்பாணத்தில் 29 பேர் உட்பட வடக்கில் 36 பேருக்கு கொரோனா

### பல்வேறு தரப்பினர் தொற்றாளர்களாக அடையாளம்

யாழ்ப்பாணம்,மே 01

யாழ்ப்பாணத்தில் 29 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 36 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று வெள்ளிக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்

15

## அனைத்து வைபவங்களையும் ஒத்திவைத்து ஒத்துழையுங்கள்

### மக்களிடம் இந்துமதத் தலைவர்கள் வலியுறுத்து

கொழும்பு, மே. 01

சகல வைபவங்களையும் ஒத்திவைத்து உயிர்களைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழையுங்கள் என்று நல்லை ஆதினம் வலியுறுத்தியுள்ளது.

நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொத்துவில்...

பேருக்கு எதிராகப் பொலிஸார் தொடுத்த வழக்கை திகதி குறிப்பிடாமலேயே தள்ளிப்போட்டு, முடிவுறுத்தியது கல்முனை நீதிவான் நீதிமன்றம்.

கல்முனை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சம்சுதீன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிவான் மேற்படி உத்தரவை விடுத்தார்.

வழக்கின் எதிராளிகளான பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், த.கலையரசன், கோ.கருணாகரம் (ஜனா), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரியநேத்திரன், யோகேஸ்வரன் உட்பட ஏழு பேரும் பிரசன்னமாகியிருந்தனர்.

கல்முனை நீதிமன்றுக்கு சென்றுகொண்டிருந்தபோது விபத்தில் சிக்கிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் அங்கு ஆஜரானார்.

ஏற்கனவே இந்த வழக்குக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாம் நேற்று முன் தினம் பெற்றுக்கொண்ட இடைக்காலத் தடை உத்தரவை சுமந்திரன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த வழக்குத் தொடர்பாக புதிய உத்தரவு எதனையும் கல்முனை நீதிவான் நீதிமன்றம் வழங்கக்கூடாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை தெரிந்ததே.

மேற்படி இடைக்கால உத்தவைப் பெறுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சுமந்திரனினால் சமர்ப்பிக்கப்பட்ட ரிட் மனுவில் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிவான் மற்றும் தற்போதைய நீதிவான் ஆகியோரின் பெயர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் மேற்படி ஏழு பிரதிவாதிகளுக்கும் அழைப்பாணை விடுத்தவர் தாம் அல்லர் என்றும், பதில் நீதிவான் ஒருவரே என்றும் நீதிவான் சம்சுதீன் சுட்டிக்காட்டினார்.

அதனை ஏற்றுக்கொண்ட பிரதிவாதிகளின் சட்டத்தரணி சுமந்திரன், எனினும் தடையீட்டு ரிட் ஆணை ஒன்று ஒரு நீதிமன்றத்துக்கு எதிராக அல்ல, அதன் நீதிபதிக்கு எதிராகவே பெயர் குறிப்பிட்டுப் பெற முடியும் என்பதாலும், அத்தகைய மனுவை பதில் நீதிவானுக்கு எதிராகத் தொடர முடியாது என்பதாலும் தற்போது பதவியில் உள்ள நீதிவானின் பெயர் ரிட் மனுவில் குறிப்பிடப்பட்டது என்று விளக்கமளித்தார்.

இப்படி கல்முனை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டமைக்கு பொலிஸாரை கடிந்துகொண்டார் நீதிவான். இவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்டமைக்கான அறிவுறுத்தல் எப்படி வந்தது என்று நீதிவான் பொலிஸாரை வினாவினார். மேலிடத்தில் இருந்து வந்த வழிகாட்டுதல் என்று பொலிஸார் பதிலளித்தனர்.

மேலிடத்தில் இருந்து உரிய ஆலோசனை பெறாமல் தாங்கள் வழக்கை விலக்கிக் கொள்ள முடியாது எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதனையடுத்து வழக்குக்குப் புதிய திகதி ஏதும் குறிப்பிடாமல் அதனைத் தள்ளிப் போட்டு விடயத்தை முடிவுறுத்தினார் நீதிவான்.

நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தொடரும் முயற்சி எதனையும் பொலிஸ் தரப்பு மீள ஆரம்பிக்குமானால் இவ்விடயத்தை மீளவும் மேன் முறையீட்டு நீதிமன்றுக்குத் தாம் கொண்டு செல்வார் என மனுதாரர் தரப்பு சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த விவகாரம் திரும்பவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது கல்முனை நீதிவான் நீதிமன்றத்தின் இந்த முடிவை மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு ரிட் மனுவின் ம னுதாரரர் சட்டத்தரணி சுமந்திரன் கொண்டுவருவார் எனவும் கூறப்பட்டது.

கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை மீள ஆரம்பிக்க பொலிஸார் முயற்சிக்காத வரையில் மேற்படி ரிட் மனுவையும் தாம் இடைநிறுத்தி விலக் கிக் கொள்ள விரும்புகிறார் என அவர் மேன்முறையீட்டு மன்றுக்குத் தெரிவித்து, அங்கும் இவ் வழக்கை முடிவுக்குக் கொண்டு வர அவர் நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறப்பட்டது.

## ரிஷாத்தை...

பாராளுமன்ற படைக்கல சேவிதரினால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு இது தொடர்பிலான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் 90 நாட்கள் தடுப்புக் காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆபத்து...

புத்தாண்டு காலப்பகுதியில் சுகாதாரக் கட்டுப்பாடுகளை மக்கள் மீறியதால் இந்த பேராபத்து ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டை முழுமையாக-உடனடியாக முடக்காதுபோனால் நிலைமை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு எல்லை மீறும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம், இலங்கை மருத்துவர் சங்கம் ஆகியன அரசுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

ஆயினும் நாட்டை முடக்கும் எந்த தீர்மானமும் இல்லை என அரச தரப்பு தொடர்ச்சியாகக் கூறிவருகிறது.

நாட்டில் நேற்று மட்டும் ஆயிரத்து 636 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, இலங்கையில் ஒரே நாளில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் நேற்றுக் கண்டறியப்பட்டமை பதிவாகியது.

இந்நிலையில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 146ஆக அதிகரித்தது. (அ-எ)

## திருமணம்...

கொரோனா வைரஸ் பரவுவல் அதிகரித்துள்ளது என சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள் ளனர்.

இதேவேளை, மத வழிபாட்டு இடங்களில் கூட்டுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏற்கனவே அறிவித்திருந்தார். (எ)

## யாழ்ப்பாணத்தில்...

கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 644 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 36 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதில், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 13 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் 8 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் ஒருவரும, சிறைச்சாலையில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவன ஊழியர்களிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தனியார் வங்கி ஊழியர் ஒருவரும், நட்சத்திர விடுதிப் பணியாளர் ஒருவரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர். ஏனைய மூவரும் இலங்கை மின்சார சபை ஊழியர்கள்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் ஐவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். வவுனியா வைத்திய சாலை தனிமைப் படுத்தல் விடுதியில் ஒருவருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோல், மன்னார் வைத்திய சாலையில் இருவருக்கும், மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். (எ)

## அடுத்த கட்டம்...

கொரோனா தடுப்பு தொடர்பான கூட்டத்திலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய கொரோனா மூன்றாம் அலையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கு இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

முதலாம், இரண்டாம் அலைகளை விட மூன்றாம் அலை சவால் மிக்கதாகவுள்ளது. எனவே, இதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினருக்கு சகலரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

முழு உலகுக்கும் சவாலாக அமைந்துள்ள இந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் மற்றும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சுகாதார நிபுணர்களின் ஆலோசனைகளுக்கமைய நாட்டை முடக்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் அரசாங்கம் தீர்மானிக்கும்.

அந்தத் தீர்மானம் எதுவாகக் காணப்பட்டாலும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (எ)

## இந்த மாதம்...

தலங்கள் அனைத்திலும் திருச்செபமாலை சொல்லுங்கள். இதனைவிட யாழ்.மறை மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரும் மே மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் வீடுகளில் குடும்ப செபமாலை சொல்லி கொரோனா தொற்றில் இருந்து உலகம் முழுவதும் பாதுகாக்கப்பட அன்னையிடம் இரந்து வேண்டுங்கள் என யாழ்.ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனம் - மதம் - நிறம் - மொழி - கலாசராம் - கண்டம் என்ற எந்த வேறுபாடுமின்றி ஒரு கொடிய உலக யுத்தம்போல் சத்தமின்றி இன்று உலக உயிர்களை அழிக்கின்ற கொரோனா நோய் உலக மக்கள் எல்லாருடைய இயல்பு வாழ்வையும் பாதித்து எல்லாரையும் பயத்திலும் பதற்றத்திலும் இனி என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் வாழ வைத்துள்ளது.

அரச தலைவர்களோ சுகாதார உயர் அதிகாரிகளோ ஆன்மீகத் தவைர்களோ அவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் எந்த அதிகாரத்தில் இருந்தாலும் எதுவுமே செய்ய முடியாத ஒருநிலை இதுவாகும். இறைவன் மட்டுமே இந்த இக்கட்டான வேளையில் உதவிக் கரம் நீட்ட முடியும். தம் அளவு கடந்த இறை இரக்கத்தைக் காட்ட முடியும். மனித உயிர்களைப் பாதுகாக்க முடியும். இக்கொடிய நோயை முடிவுக்கு கொண்டு வர முடியும்.

இந்த இக்கட்டான இவ்வேளையில் துணை புரிய கத்தோலிக்க மக்களுக்கு திருச்செபமாலை ஒன்றே ஒரு பெரிய ஆயுதமாகும். வரலாற்றில் பல தடவைகளில் நம்பிக்கையோடு திருச்செபமாலை சொல்லப்பட்டு நடக்க முடியாது என எண்ணப்பட்ட பல விடயங்கள் புதுமைகளாக நடந்துள்ளன என்பது உலகறிந்த உண்மையாகும்.

எனவேதான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் உலகெங்கும் பரவியுள்ள கொவிட் தொற்றை முடிவுக்கு வர மே மாதம் முழுவதும் அன்னையின் உலகத் திருத்தலங்களில் திருச்செபமாலை சொல்லும்படி அழைப்பு விடுத்துள்ளார். - திரு அவை முழுவதிலுமிருந்து இறைவனை நோக்கி இடைவிடாத செபம் எழுந்தது - என்ற தலைப்பில் நடைபெறும் இந்த உலகளாவிய திருச்செபமாலைச் செப முயற்சியை மே மாதம் முதல் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் தொடக்கி வைத்து மே மாதம் 31ஆம் திகதி நிறைவு செய்து வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## கேரளாவில்...

பிரஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது

கேரளாவுடன் முன்னாள் அமைச்சருக்குள்ள உள்ள தொடர்புகள் குறித்த குறிப்பிடத்தக்க விபரங்கள் எவையும் இன்னமும் கிடைக்காத போதிலும் 2009 இல் அவர் கேரளாவிற்கு ஏன் விஜயம் மேற்கொண்டார் என்பது குறித்தும் கேரளாவின் மததலைவர்கள் சிலருடன் அவருக்குள்ள தொடர்புகள் குறித்து விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

கேரளாவின் மததலைவர்கள் சிலர் இலங்கையில் ரிஷாத் பதியுதீனை சந்தித்துள்ளனர். அத்துடன் 2013 இல் சென்னைக்கு விஜயம் மேற்கொண்ட வேளை அவர் குறிப்பிட்ட மதத்தலைவர்களை சந்தித்துள்ளார். ரிஷாத் பதியுதீனின் தந்தை கேரளாவிலுள்ள ஒரு பகுதியை பூர்வீகமாக கொண்டவர் என தெரிவித்துள்ள புலனாய்வு அதிகாரிகள், அவர் அந்த பகுதியில் உள்ள சிலருடன் தொடர்பிலிருந்தார் எனவும் தெரிவித்துள்ளனர்.

புலனாய்வு பணியகமும் தேசிய விசாரணை முகவர் அமைப்பும் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திற்கு இது தொடர்பான விசாரணைகளில் ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரான் ஹாசிமுடன் சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பை பேணிய தமிழ்நாட்டை சேர்ந்த ஐ.எஸ். ஆதரவாளர் ஒருவரை 2019 ஜூன் மாதம் தேசிய புலனாய்வு முகவர் அமைப்பை சேர்ந்தவர்கள் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இலங்கையின் அரசியல்வாதிக்கும் கேரளாவிற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து வெளியான தகவல்களை உறுதிசெய்வதற்காக கேரள பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வார்கள் என மாநிலத்தின் தலைமை பொலிஸ் அதிகாரி லோக்னாத் பெகேரா தெரிவித்துள்ளார்.

கேரளாவின் என்ற பட்னா பகுதியிலிருந்து 2016 இல் ஐஎஸ் அமைப்புடன் இணைவதற்காக சிரியா சென்ற ஐந்து பேர் குறித்த விசாரணைகளின் போது அவர்களில் சிலர் இலங்கையின் தேசிய தவ்ஹீத் ஜமாத்திடம் சென்றுள்ளமையும் அவர்கள் அங்கு மதப் பயிற்சி பெற்ற பின்னர் சிரியாவிற்கு சென்றுள்ளமையும் தெரியவந்தது என தெரிவித்துள்ள அதிகாரிகள், ரிஷாத் பதியுதீனிற்கும் உள்ள தொடர்புகள் குறித்து ஆழமான விசாரணை இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## 11 கொரோனா...

மூலம் இலங்கையில் கொரோனாவினால் மரணமடைநதவர்களின் எண்ணிக்கை 678 ஆக அதிகரித்துள்ளது.

## அனைத்து...

இந்துமா மன்றின் உப தலைவர், 'செஞ்சொற் செல்வர்' கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் சிவதொண்டன் சுவாமிகள் இணைந்து இதனை வலியுறுத்தியுள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பாரத தேசத்திலும் எங்கள் மண்ணிலும் கோரோனா என்னும் கொடிய தொற்றுநோய் தாண்டவமாடுகின்றது. பாரத தேசத்தில் பல ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்து வீழ்ந்து இறப்தை நான் காண்கின்றோம்.

பாரத தேசத்திலும் எங்கள் மண்ணிலும் கோரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நலன் பெற இன்று முதல் நண்பகல் 12 மணிக்கு மணி ஓசையை ஒலிக்கச் செய்து பிரார்த்தனை செய்யுங்கள்.

ஆலயங்களில் நாளாந்த பூசை, நித்திய நைமித்திய வழிபாடுகளைச் செய்யுங்கள். அடியவர்கள் ஆலயங்களில் கூடுவதைத் தவிருங்கள்.

பொதுமக்கள் வீட்டுக்கு வெளியில் செல்வதை இயன்றவரை கட்டுப்படுத்துங்கள்.

சுகாதார மருத்துவ சமூகத்தின் வேண்டுதலுக்கு அனைவரும் மதிப்பளித்து பாதுகாப்பாகச் செயற்படுங்கள்.

சகல வைபங்களையும் ஒத்திவைத்து உயிர்களைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழையுங்கள் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

அரசியல் தீர்வு மாத்திரமல்ல, இந்தியாவிடமிருந்து வீட்டுத்திட்டம் வேண்டும், கோவில்களை அபிவிருத்தி செய்ய நிதி உதவி வேண்டும், இப்படி எதற்கெடுத்தா லும் இந்திய உதவியை எதிர்பார்ப்பவர்கள் நாம்.

ஆனால், இன்று இந்தியாவே நமது உதவியை எதிர்பார்த்திருக்கின்றது.

தனிமைப்படுத்தல் செய்ய இடமின்றி இங்கே ஆட்களை அனுப்பவேண்டிய நிலையில் இந்தியா இன்றிருக்கின்றது.

கொரோனா என்ற கொடிய அசுரன் முழு இந்தியாவையும் கதிகலங்க வைத்துக்கொண்டிருக்கின்றான்.

மரணிப்பவர்களை எரிப்பதற்குக்கூட இடமின்றி மக்கள் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், நம்மவர்களோ, இந்த அச்சம் குறித்து எவ்வித கரிசனையும் இன்றி இருந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவை உலுக்கும் இந்தத் தொற்று நம்மைத் தாக்குவதற்கு அதிகநேரம் எடுக்கப்போவதில்லை. எந்த நேரத்திலும் இந்த அபாயத்தை நாம் எதிர்கொள்ள நேரலாம்.

சில தினங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிறி காமாட்சி அம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழவில் கொவிட் 19 சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டில் ஆலயத்தின் தலைவரும் செயலாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதுபற்றிய செய்தி ஈழநாடுவில் வெளிவந்திருந்தது. அந்தச் செய்தியுடனான படத்தில் பக்தர்கள் முண்டியடிக்கின்ற காட்சியையும் காண முடிந்தது.

ஆலயங்களில் 50 பக்தர்களுடன் மட்டுமே திருவிழாக்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்தினுள் அனுமதிக்கப்படுபவர்களை மாத்திரமே ஐம்பது என்ற அளவில் ஆலய நிர்வாகத்தினரால் கட்டுப்படுத்த முடியும். ஆனால், ஆலயத்திற்கு வெளியே பக்தர்களை கட்டுப்படுத்துகின்ற வேலையை ஆலய நிர்வாகிகளால் செய்யமுடியுமா?

ஏன், யாழ்ப்பாணம் எங்குமுள்ள ஆலயங்களில் ஒவ்வொருவரும் போட்டிபோட்டுக்கொண்டு தேர்களை செய்திருக்கின்றனர். குடாநாட்டிலேயே எங்களுடைய தேர்தான் அதி உயரமானது என்று பெருமைப்பட்டுக் கொள்ளவதற்காக ஒவ்வொருவரும் செய்யப் புறப்பட்டு இன்று எல்லா ஆலயங்களிலும் பிரமாண்டமான தேர்கள் இருக்கின்றன. அவற்றை இழுப்பதற்கே பலர் தேவைப்படும் நிலையில், இந்த சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுவது சாத்தியமா என்ற கேள்வியும் எழுகின்றது.

கற்றறிந்த சமூகம், எல்லாம் அறிந்த சமூகம் என்று பெருமைப்பட்டுக்கொண்டால் மாத்திரம் போதுமானதல்ல.

ஆலயத்தில் 50 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள் என்றால், நான் ஏன் அந்த ஐம்பதில் ஒன்றாக இருக்கக்கூடாது என்று நினைத்துக்கொண்டு ஒவ்வொருவரும் புறப்பட்டு ஆலயத்திற்கு வந்தால், அதுவே பல ஆயிரம் பேராகி விடும்.

இந்த நெருக்கடியான காலத்தில் நாமே நம்மைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்கு அப்பால், மற்றவர்களையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு.

ஆலய நிர்வாகிகளே, ஐம்பது பக்தர்களை தெரிவு செய்துவிட்டு மற்றவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதை அறிவிக்க வேண்டும். ஆலயத்தில் தேர்த் திருவிழா நடக்கின்றது என்றால், அந்த ஆலய சுற்றாடலில் மக்கள் கூடுவதைத் தடுக்கின்ற பணிகளை பொலிஸாரும் செய்யவேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இன்றும் மாகாண சபை தேர்தல்கள் குறித்தும், யார் முதலமைச்சர் வேட்பாளராவது என்பது குறித்தும் மோதிக்கொண்டிருக்கும் அரசில்வாதிகள், தமது சமூகத்தின் பாதுகாப்பிற்காக வீதிகளில் இறங்கவேண்டும்.

தேர்தல் காலங்களில் வீடுவீடாக ஏறி இறங்கும் அரசியல்வாதிகள், வரவிருக்கும் அச்சுறுத்தல் குறித்து மக்களை விழிப்படையச் செய்யவும், மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்னபற்ற ஊக்குவிக்கவும் வேண்டும் என்பதற்கு அப்பால், அதனை மக்கள் செய்கிறார்களா என்பதை வீதியில் இறங்கி கவனிக்கவேண்டும்.

எந்த அச்சுறுத்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட துறையினருக்கு பணிப்புரைகளை இட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அத்தகையதொரு அவலம் ஏற்படாமல் தடுப்பதற்கு "நம்மால் முடியும்" என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு அதன்படி நடந்தாலேயே வரவிரக்கும் நெருக்கடியை தவிர்க்கலாம்.

**- ஊர்க்குருவி.**

# கொவிட் – 19 தொற்று நோய் நிலைமையிலும் உழைப்பாளர் உரிமைகளை பாதுகாத்தோம்!

## மே தினச் செய்தியில் ஜனாதிபதி பெருமிதம்

கொழும்பு, மே 01

"நாட்டின் இறையாண்மையையும் தேசிய பாதுகாப்பையும் எமது அரசாங்கம் உறுதி செய்துள்ளது. அத்துடன், உழைக்கும் சமூகத்துக்காக ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு, தொற்றால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வை மீட்டெடுக்க 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு, மலையக தொழிலாளர்க்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு என சர்வதேச உரிமைகளை பாதுகாத்த - அர்த்தப்படுத்திய மகிழ்ச்சியுடன் எனது சர்வதேச தொழிலாளர் தின வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்"

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில்,

மக்களுக்கு உறுதியளித்தபடி எமது அரசாங்கம் தேசிய பாதுகாப்பையும் நாட்டின் இறையாண்மையையும் உறுதி செய்துள்ளது. மேலும், எமது பாரம்பரிய மரபுரிமைகளுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய கைத்தொழில் துறையை மேம்படுத்தும் அதேநேரம், விவசாய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உழைக்கும் சமூகங்களை பெரிதும் பாதிக்கும் வறுமையை எமது சமூகத்திலிருந்து ஒழிப்பதற்கான தெளிவான பொருளாதார திட்டத்தை நாங்கள் வகுத்து, முறையாக செயல்படுத்தி வருகிறோம். தற்போதைய கொவிட் 19 நோய்த் தொற்றால் உலகில் மிகவும் சவாலுக்கு உள்ளாகியுள்ள பிரிவினர் தொழிலாளர் வர்க்கமாகும். எமது நாட்டின் உழைக்கும் மக்களும் முகம்கொடுத்திருக்கும் அந்த யதார்த்தத்தை அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது. எனவே, உழைக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கக்கூடிய கட்டுப்பாடுகளை விதிக்காமல் அவர்கள் தமது இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் தொடர்ந் தும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கல்வித் தகைமைகள் இல்லாத காரணத்தினால் நிர்க்கதியான நிலையில் இருந்த ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு அரச சேவையில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் மிக உயர்ந்த பயனை அனுபவிக்கும் வாய்ப்பு உழைக்கும் மக்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் கிடைத்துள்ளது.

தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வை மீட்டெடுக்க 5 ஆயிரம் ரூபாயும், புத்தாண்டு காலத்திலும் 5 ஆயிரம் ரூபாயும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. அரச ஊழியர்களின் ஊதியங்கள் எவையும் குறைக்கப்படவில்லை. அனைத்து பொது நலத் திட்டங்களையும் முன்னெடுத்ததன் மூலம் உழைக்கும் மக்களின் உரிமைகள்



பாதுகாக்கப்பட்டன.

இதேபோன்று, தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை 1,000 ரூபாயாக உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததன் மூலம் அந்த மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் வழி செய்தது. 19 வகையான இறக்குமதி பொருட்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்து பலப்படுத்தப்படும் சுதேச பொருளாதாரத்தின் நன்மைகளில் பெரும் பகுதி எமது நாட்டின் விவசாய சமூகத்தை முதன்மையாக கொண்டு உழைக்கும் மக்களுக்கே கிடைக்கின்றது.

தொற்றுநோய் காரணமாக எதிர்பாராத விதமாக தொடர்ந்து இரண்டாவது வருடமாகவும் மே தின கொண்டாட்டங்களையும் ஊர்வலங்களையும் தொழிலாளர்கள் இழந்துள்ளனர். ஆயினும்கூட, உங்கள் உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் போராட்டம் வலுவானது என்பதை நாங்கள் அறிவோம் - என்றுள்ளது. (ஐ)

# சுகாதார விதிகளை அனுசரித்து நம்மை நாமே பாதுகாப்போம்

## மே நாள் செய்தியில் தமிழ் அரசு தலைவர்

யாழ்ப்பாணம், மே 01

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த வேண்டி விதிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள், கட்டுப்பாடுகள் காரணமாக மக்களும், தொழிலாளர் வர்க்கமும் பெற்ற உரிமைகளையும் இழந்து உயிருக்குப் போராடும் நிலையில் மே நாளைக் கொண்டாட முடியாமல் இருக்கின்ற நிலைமையால் உலகம் சோகத்திலுள்ளது. எனினும் சுகாதார விதிகளை அனுசரித்து நாமே நம்மைப் பாதுகாப்பதே இன்றைய தேவை.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா விடுத்துள மே நாள் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், தொழிலாளர் வர்க்கத்தின் "மே" நாள் வெற்றித்திருநாள் உலகம் முழுவதும் கொண்டாட முடியவில்லை என்பது பெரும் சோகமே. 1886 "மே" 1 இல் அமெரிக்காவில் சிக்காக்கோவில் தொழிலாளர்கள் எட்டுமணி நேர வேலை கோரி முதலாளித்துவத்தின் மனித குலத்திற்கெதிரான அடிமைத்தனம், அடக்கு முறை, ஒடுக்கு முறைக்கெதிராக ஒன்றுபட்டுப் போராடி வெற்றிபெற்ற நாள் உலகம் முழுவதும் கொண்டாடப் பட்டு வந்தது.

தொழிலாளர் வர்க்கம் 100 கோடி வரை உலகம் முழுவதும் பெரும் போராட்டங்களை உலகம் முழுவதும் அரசியல் அடிப்படையிலும், நாடாளும் வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. அதேவேளை இன்று உலகநாடுகளில் தொழிலாளர் மட்டுமல்ல மனித குலமே கொரோனா வைரஸ் தொற்றுத் தீவிரத்தினால் பல கோடி மக்கள் பாதிக்கப்பட்டும் மரணமடைந்தும் பேரவலத்தில் வீழ்ந்து வருகின்றனர். பேரழிவு தொடருகின்றது. சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் 100 கோடி தொழிலாளர்கள் பெற்ற உரிமைகளையும், வாழும் உரிமையையும் இழந்து கொரோனா நோய் பரவலுக்குப் பலியாகப் போகிறது என்று எச்சரித்துள்ளமையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் "மே: நாள் கொண்டாட்டங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் பெற்ற வெற்றிகளை பாதுகாத்து நிற்பதற்கும், தொழில்துறைகளில் நவீன அறிவியல் வளர்ச்சியினால், தொழில்நுட்பத்தினால் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், வளர்ச்சிகளினால் உடலுழைப்புக்கு அப்பால் அறிவியல் வளர்ச்சியுடன் புதிய தொழிலாளர் எழுச்சி கொண்டுள்ளனர். அத்தோடு சமூக பொருளாதார மாற்றங்களுடனும் வாழும் காலத்திலும் தம் உரிமைகளைப் பாதுகாத்து நிற்கவும் மே நாள் விழாக்கள் பேரணிகள் நாடுகளில் அரசியல் ஆட்சி மாற்றங்களையும் பல நாடுகளில் ஏற்படுத்தி வந்திருக்கின்றமையை வரலாறு கொண்டிருக்கிறது.

இலங்கையிலும் தமிழ்த் தேசிய இனம் தாம் வாழும் தேசத்தில் விடுதலைக்காகவும் போராடும் திடசங்கற்பத்தை மே நாள் கொண்டாட்டத்துடன் இணைத்து எழுச்சி கொண்டு வந்திருக்கிறது. தென்னிலங்கையில் தொழிலாளர் வர்க்கம் காலகதியில் இனவாத ரீதியிலும் இடதுசாரித்துவம் கூட பிளவுபட்டு நிற்கும் நடைமுறைகளையும் எதிர்கொள்ள வேண்டிய காலம் இலங்கையில் ஏற்பட்டிருப்பதையும் அனுபவிக்கின்றோம்.

21ஆம் நூற்றாண்டிலும் குறிப்பாக மலையகத் தொழிலாளர் வர்க்கம் இன்றும் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெறுவதற்குப் போராடிக் கொண்டிருக்கிறது. நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை, வாழும் உரிமையிழந்தோர், வீடற்றோர் நிலைமை, ஊட்டச்சத்தற்றோர் என்பதற்கப்பால் கொரோனா வைரஸ் காரணமாக வேலையிழந்து வருவோர் பசிபட்டினியால் நோய்களால் மரணத்தை எட்டுவோர் இலட்சக்கணக்கில் பெருகும் நிலை ஏற்பட்டு வருகிறது.

கர்ப்பவதி தாய்மார், குழந்தைகள்கூட புதிய திரிபுபட்ட வைரஸ் பரவலால் பாதிக்கப்படுவது இன்னும் கொடுமை. இவ்வாறானதொரு சூழ்நிலையில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த வேண்டி விதிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள், கட்டுப்பாடுகள் காரணமாக மக்களும், தொழிலாளர் வர்க்கமும் பெற்ற உரிமைகளையும் இழந்து உயிருக்குப் போராடும் நிலையில் மே நாளைக் கொண்டாட முடியாமல் இருக்கின்ற நிலைமை இலங்கையில் மட்டுமல்ல, தமிழ் மக்கள் மட்டுமல்ல உலகமே சோகத்தில் வீழ்ந்து கிடக்கின்றது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.05.2021 சனிக்கிழமை
சார்வரி, சித்திரை 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரச இயந்திரம் வீழ்ச்சியடைந்துவிட்டதா?

பொதுஜன பெரமுன அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதில் முன்னின்று செயல்பட்டவர்களில் ஒருவராக கருதப்படும், முத்தொட்டுவ ஆனந்த தேரர், மஹிந்த ராஜபக்ஷவிடம் அதிக பொறுப்புக்களை வழங்குமாறும், இல்லாவிட்டால் நாட்டின் அரச இயந்திரம் முற்றிலுமாக செயலிழந்துவிடுமென்றும் தெரிவித்திருக்கின்றார். மக்கள் தொடர்பில் அநுபவமிக்க, அறிவுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அழைத்து கலந்துரையாடுங்கள் - அண்ணா, நடந்துள்ளவற்றுக்கு என்ன செய்யவேண்டுமென்று கேளுங்கள் - என, ஜனாதிபதி கோட்டாபயவிடம் தேரர் கோரிக்கையொன்றை முன்வைத்திருக்கின்றார். இந்த கருத்தை ஆழமாக நோக்கினால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவரும் விடயங்கள் திருப்திகரமாக இல்லை. அத்துடன், அவரின் குழுவினரால் விடயங்களை சிறப்பாக முன்னெடுக்க முடியவில்லை, முன்னெடுக்க முடியாது. அனுபமிக்க - அறிவுள்ளவர்கள் அவரது அணியில் இல்லை. எனவே, பிரச்னைகளை அவர் தொடர்ந்தும் தனித்து கையாளக்கூடாது. ஒருவேளை அப்படி நடந்தால், நாடு சீரழிந்துவிடும். முத்தெட்டுவ தேரரின் கருத்துக்களை உற்று நோக்கினால் இவ்வாறானதொரு பொருளே பொதிந்திருக்கின்றது.

ஒருபுறம் பொதுஜன பெரமுனவின் கதவு திறந்திருப்பதாகவும், வெளியேற விரும்புபவர்கள் வெளியேறலாமெனவும், சில தினங்களுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். தங்களின் இலக்கு பலமானதோர் அரசாங்கத்தை கொண்டுநடத்துவதாகும். இதனை விளங்கிக்கொண்டு, பிரதமர் செயல்படவேண்டும். இல்லையேல், அதன் விளைவுகள் எப்படியிருக்குமென்று நாம் சொல்லத் தேவையில்லை.

ஒரு புறம் ஜனாதிபதியிடம் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஒப்படையுங்கள் என்று சிலர் கூறுகின்றபோது, மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுங்கள். அவரின் அறிவுரையை கேட்டு செயல்படுங்கள் என்றவாறும் பிறிதொரு தரப்பினர் கூறுகின்றனர். கொரோனா விவகாரம் முற்றிலும் ஜனாதிபதியின் தலைமையிலான அணியினராலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் விடயங்கள் வெற்றிகரமாக கையாளப்பட்டதான அபிப்பிராயங்கள் நிலவியபோதிலும்கூட, தற்போது நிலைமைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் விமர்சனங்களை தோற்றுவித்திருத்திருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில், மீண்டும் நாடு முடக்கப்படுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. நாடு ஒருமுறை முடக்கப்பட்டபோது பொருளாதா ரீதியில் மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டது. இந்த நிலையில், மீண்டுமொரு முடக்கத்தை அரசாங்கத்தினால் எதிர்கொள்ள முடியுமா என்பது பாரிய சவாலாகும். கொரோனா தொற்று அதிகரித்துவருகின்ற நிலையில் அரசாங்கத்தின்மீதே அனைவரின் பார்வையும் திரும்புகின்றது. இது இயல்பானதும்கூட. ஏனெனில் விடயங்கள் வெற்றிகரமாக நடந்தால், அது அரசாங்கத்திற்கான பாராட்டாக மாறும். அதேவேளை சரிவுகள், தோல்விகள் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும்.

எதிரணியினர் தொடர்ந்தும் அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கிவருகின்றனர். அதாவது, அரசாங்கம் நாட்டின் முதன்மையான பிரச்னையை, எவ்வாறு கையாளுவதென்று சிந்திக்காமல், எதிரணியினரை பழிவாங்கும் நடவடிக்கைகளையே முன்னெடுக்க முயற்சிக்கின்றதென்று குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் அரசாங்கத்தின் பலமான தூண்களாக கருதப்பட்ட முக்கிய பௌத்த பிக்குகள் அணியும் அவ்வப்போது ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறும் போர்வையில், ஜனாதிபதி தொடர்பில் அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. முத்தெட்டுவ ஆனந்த தேரரின் கூற்றானது, ஜனாதிபதியின் மீதான ஒரு குற்றச்சாட்டாகவே இருக்கின்றது.

# 'தராக்கி' சிவராம் நினைவலைகள்

- அலசுவது இராஜதந்திரி -

ஜனநாயகத்தின் ஐந்து தூண்களில் ஒன்றான ஊடகத்துறை இலங்கையில் அச்சுறுத்தலுக்குள்ளாகி அவலப்பட்டிருந்த ஓர் இருண்ட யுகத்தை எடுத்துக்காட்டுவதாகவே ஊடகவியலாளர் த. சிவராம் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் விளங்குகின்றது. இலங்கையில் மூன்று தசாப்த கால யுத்தம் நிலவியபோது, சுமார் பதினைந்து ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் தமிழ் ஊடகவியலாளர்களே அதிகமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ் ஊடகவியலாளர்களில் 'வீரகேசரி' பத்திரிகையின் ஐ. நடேசன் மற்றும் 'ஈழநாடு' பத்திரிகையில் ஒரு நிருபராக கடமையாற்றிய ஐ. சண்முகலிங்கம், 'தினமுரசு' பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான நடராஜா அற்புதராஜா, மயில்வாகனம் நிமலராஜன், எஸ். சுகிர்தராஜன், பிரபல வானொலி அறிவிப்பாளர் கே. எஸ். ராஜா, தொலைக்காட்சி அறிவிப்பாளரான ரேலங்கி செல்வராஜா, வைத்தியத்துறையில் ஈடுபட்டபோதிலும் வடக்கு-கிழக்கு தமிழர்களின் அரசியல் வரலாற்றுடன் கூடிய 1987ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற சம்பவங்களை தொகுத்துக்கூறிய 'முறிந்த பனை' என்ற நூலின் இணை ஆசிரியர்களில் ஒருவரான ரஜனி திரணகம ஆகியோர், கொலையுண்ட தமிழ் ஊடகவியலாளர்களில் முக்கியமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**றிச்சார்ட் டி சொய்ஸா**

தராக்கி சிவராம், 1988ஆம் ஆண்டு பத்திரிகைத் துறையில் காலடி எடுத்து வைத்தார். இவரை பத்திரிகைத்துறையில் ஈடுபாடு கொள்ளவைப்பதில் முன்னின்றவர் பிரபல தென்னிலங்கை ஊடகவியலாளரான றிச்சார்ட் டி சொய்ஸா. இதன் பின்னர் 'தி ஐலண்ட்' பத்திரிகையில் அதன் ஆசிரியராக இருந்த காமினி வீரக்கோனினால் அரசியல் கட்டுரையாசிரியராக பணியிலமர்த்தப்பட்டார் சிவராம் .

சிவராமுக்கு 'தாரக' என்ற புனைபெயரை சூடியதும் காமினி வீரக்கோன் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்களத்தில் தாரக என்பது நட்சத்திரம் எனப்பொருள்படும். பின்னாளில், தாரக என்ற பெயரே 'தராக்கி' என மருவி வரலாயிற்று.

சிவராம் பத்திரிகைத்துறையில் இறங்குவதற்கு ஏதுவாக இருந்த றிச்சாரட் டி சொய்ஸா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் காலப்பகுதியில் 1990ஆம் ஆண்டு, வீட்டிலிருந்து கடத்திச்செல்லப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். தனது நண்பரான கொலையுண்ட றிச்சார்ட் டி சொய்ஸாவின் சடலத்தை பின்னர் தாமே அடையாளம் காண்பிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கும் சிவராம் உள்ளாகியிருந்தார். வடக்கு-கிழக்கு நிலபரத்தை அன்றைய நாட்களிலே மிகத் துணிச்சலோடு ஓர் அரசியல் கட்டுரையாளராக 'தி ஐலண்ட்' பத்திரிகையில் சிவராம் எழுதிவந்தார்.

**புளொட்டில் சிவராம்**


இளவயதிலே புளொட் அமைப்பில் ஓர் அங்கத்தவராக இருந்த சிவராம், பின்னாளில் பத்திரிகையாளராக பணியாற்றிய நிலையில் தமிழ் தீவரவாத அமைப்புகள் குறித்து விரிவான பின்புலத்தைக்கொண்டவராகவும் காணப்பட்டார். இதன்காரணமாக அவர் நிறையவே பிரத்தியேக தகவல்களைக்கூட அனைத்து தமிழ் ஆயுதப்போராட்ட அமைப்புகள் குறித்தும் பெறக்கூடியவராக காணப்பட்டிருந்தார். சிவராமின் பித்தியேக தகவல்களே 'தராக்கி' என்ற புனைபெயரில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு மெருகூட்டுவதாகவும் காணப்பட்டது. அதேசமயம், தராக்கி சிவராமின் பிரத்தியேக தகவல்களே அவரை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் சந்தேகக்கண்கொண்டு பார்க்கவும் வைத்திருந்தது.

சிவராம் ஆங்கிலத்தில் மட்டுமன்றி. தமிழிலும் பல சிறந்த அரசியல் கட்டுரைகளை எழுதி வந்திருந்தார். அத்துடன், சிவராம் பங்கு பற்றுகின்ற நிகழ்வுகளிலெல்லாம் எப்போதுமே அவரைச்சூழ அரசியல் பிரமுகர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியோர் நிற்பதைக்காணமுடியும். சகல இன பத்திரிகையாளர்களுடனும் சகஜமாகப்பழகும் பண்பைக்கொண்டவர் சிவராம். அதே சமயம், கொழும்பில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தோற்றம் பெறுவதற்கும் சிவராம் தனது உதவி ஒத்தாசைகளை வழங்கி, அச்சங்கம் நல்ல முறையில் இயங்கவும் வழியமைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பல முன்னணி பத்திரிகையாளர்கள் கொலையுண்டதே வரலாறாகும். இவர்களில் 'லீடர்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த லசந்த விக்கிரமதுங்கவும் குறிப்பிடத்தக்கவர். இதுதவிர, ஊடகவியலாளரான பிரகீத் எக்னலிகொட இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் இடம்பெறுகின்றார்.

இவ்வகையில், சிவராம் கொலையுண்டு கடந்த 29ஆம் திகதியுடன் 16 ஆண்டுகள் கடந்துள்ளன. சிவராமின் சடலம் கோட்டை சிறி ஜயவர்த்தனபுர பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகிலுள்ள புதர்கள் நிறைந்த பகுதியில் துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டிருந்தது.
அவரது மரணமும் மற்றும் தென்னிலங்கையில் பிரபலமான ஊடகவியலாளர்களாக விளங்கிய றிச்சார்ட் டி சொய்ஸா, லசந்த விக்கிரமதுங்க ஆகியோரின் மரணங்கள் உட்பட, சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர்கள் பலரின் மரணங்களும் இலங்கையில் நிலவிய இருண்ட யுகத்தின்போது ஊடகத்துறையினர் எவ்வளவுதூரம் மரண அச்சுறுத்தல்களுக்கு உள்ளானார்கள் என்பதையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மே - 01 சனிக்கிழமை**
**பிலவ வருடம் - சித்திரை 18**
**நல்ல நேரம் : 7.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : பஞ்சமி**




**மேடம்**
முன்யோசனையுடன் செயல்பட வேண்டிய நாள். முக்கியப் புள்ளிகளை பகைத்துக்கொள்ள வேண் டாம். நண்பர்களுக்காக ஒரு தொகையைச் செலவிட நேரிடும். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும்.

**இடபம்**
சுபவிரயம் ஏற்படும் நாள். வரன்கள் வாயில் தேடி வரும். வருங்கால நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள். உடல் நலத்தில் கவனம் தேவை. தொழில் ரீதியாகப் பயணமொன்று தாமதப்படலாம்.

**மிதுனம்**
ஆதாயம் அதிகரிக்கும் நாள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நல்ல தகவலொன்று வந்து சேரலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். வரவு திருப்தி தரும்.

**கடகம்**
தொட்டது துலங்கும் நாள். சுபவிரயம் உண்டு. அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் புதிய பங்குதாரர்களைச் சேர்க்க முன்வருவீர்கள். உடல்நலம் சீராகும்.

**சிம்மம்**
நட்பால் நல்ல காரியம் நடை பெறும் நாள். சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச்சென்றவர்கள் மீண்டும் வரலாம். உடன்பிறப்புகள் வழியே சுபச் செய்தி வந்து சேரும்.

**கன்னி**
காதல் திருமணம் கைகூடும். வருமானம் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு புதிய ஓடர் கிடைக்கும். பணியாளருக்கு நன்மை உண்டு. அதிர்ஷ்ட தேவதை உங்களைப் பார்த்துப் புன்னகைப்பாள்.

**துலாம்**
பிரச்சினைகளில் இருந்து விடுபடும் நாள். பிள்ளைகளின் நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள். சொத்துகளால் எதிர்பார்த்த இலாபம் உண்டு. உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருட்சிகம்**
முன்னேற்றம் கூடும் நாள். வி.ஐ.பி.க்களின் சந்திப்பால் விருப்பங்கள் நிறைவேறும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**தனுசு**
மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிக்கும் நாள். வெளிவட்டார தொடர்பு விரிவடையும். தொழில் சம்பந்தமான முடிவு எடுக்க முக்கியப் புள்ளிகளைச் சந்திப்பீர்கள். விரோதங்கள் விலகும்.

**மகரம்**
உணவு விஷயத்தில் கவனமாக இருப்பது மிகவும் நல்லது. குழந்தைகளுக்கு திடீர் நன்மைகள் உண்டு. யோகம் வரும். நிதானப்போக்கு பற்றிக் கவலை வேண்டாம்.

**கும்பம்**
அமைதி கூடும் நாள். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். உடன்பிறப்புகள் வழியில் உருவான மனக்கசப்புகள் மாறும். பணி நிரந்தரம் பற்றி தகவல் உண்டு. வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**மீனம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழும் நாள். இல்லத்தினர்களின் ஒத்துழைப்போடு பணிகளை செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத வரவு ஒன்று வந்து சேரும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

# கருத்து கணிப்புகள் தவிடு பொடியாகும்

## அமைச்சர் ஜெயக்குமார் கூறுகிறார்

சென்னை, மே 01

கடந்த காலங்களில் இது போன்ற கருத்து கணிப்புகள் தவறான முடிவை தந்துள்ளதாகவும், தேர்தலுக்கு பிந்திய கருத்து கணிப்புகள், கருத்து திணிப்புகளாக உள்ளன எனவும் அமைச்சர் ஜெயக்குமார் கூறினார்.

தமிழக சட்டசபை தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள்? என்று தேர்தலுக்கு பிந்திய கருத்து கணிப்புகள் நேற்று வெளியாகின. நேற்றுமுன்தினம் வெளியான தேர்தலுக்கு பிந்திய கருத்து கணிப்புகள், தி.மு.க. தான் ஆட்சியை பிடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டன.

இதுகுறித்து அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தேர்தலுக்கு பிந்திய கருத்து கணிப்புகள், கருத்து திணிப்புகளாக உள்ளன. கடந்த காலங்களில் இது போன்ற கருத்து கணிப்புகள் தவறான முடிவை தந்துள்ளது.

2011 தேர்தலில் தி.மு.க. ஆட்சியை பிடிக்கும் என்று கருத்து கணிப்புகள் வெளியிடப்பட்டது. அது பொய்யானது. 124 தொகுதிகளை கைப்பற்றி தி.மு.க. ஆட்சி அமைக்கும் என்று கருத்து கணிப்பு வெளியானது. அ.தி.மு.க. 110 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெறும் என்று கூறப்பட்டது.

அதேபோல 2016 தேர்தலிலும், தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று கருத்து கணிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. வெற்றிபெற்று ஆட்சி



அமைத்தது.

தொகுதிக்கு 2, 3, 5 இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்ற போது இதுபோன்ற கருத்து கணிப்புகள் சரியாக அமைவதில்லை. எனவே தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகளை தவிடு பொடியாக்கி மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும்-என்றார்.

# கொரோனா போரில் பிரதமருக்கு தோல்வி!

சென்னை,மே 01

'கொரோனா எதிர்ப்பு போரில், பிரதமர் நரேந்திர மோடி படுதோல்வி அடைந்து விட்டார்' என, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில்-

கடந்த, 7ஆம் திகதி, பிரதமர் மோடி பேசுகையில், 'கடந்த ஆண்டு கொரோனா எதிர்ப்பு போரில், எப்படி வெற்றி பெற்றோமோ, அதேபோல, இந்த ஆண்டிலும் வெற்றி பெறுவோம்' என்றார். முதல் அலையின் போது, 'கொரோனாவை எதிர்த்து, வெற்றி பெற்றேன்' எனக் கூறிய பிரதமர், இரண்டாவது அலையை எதிர்கொள்ள முடியாமல், படுதோல்வி அடைந்து விட்டார் என்பதை, யாரும் மறுக்க முடியாது.

எனவே, வெற்று பேச்சுக்களை தவிர்த்து, கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் மக்களை மீட்க, உருப்படியான நடவடிக்கைகளை, மத்திய அரசு போர்க்கால அடிப்படையில் எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.




# கே.வி.ஆனந்த் காலமானார்

சென்னை, மே 01

பிரபல தமிழ் திரைப்பட இயக்குநரும், ஒளிப்பதிவாளருமான கே.வி.ஆனந்த் மாரடைப்பால் காலமானார்.

54 வயதான கே.வி. ஆனந்த், உடல்நலக்குறைவால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று காலை 3 மணிக்கு மாரடைப்பால் காலமானார்.

அவரது திடீர் மறைவு திரையுலகினரிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

2005ஆம் ஆண்டு வெளியான கனா கண்டேன் படம் மூலம் இயக்குனராக அறிமுகமான கே.வி.ஆனந்த், தொடர்ந்து அயன், கோ, மாற்றான், அநேகன், கவண், காப்பான் போன்ற படங்களை இயக்கியதன் மூலம் முன்னணி இயக்குநராக வலம் வந்தார்.

அத்தோடு காதல் தேசம், முதல்வன், பாய்ஸ், செல்லமே, சிவாஜி போன்ற வெற்றிப்படங்களுக்கு ஒளிப்பதிவும் செய்துள்ளார்.

# தேர்தல் வெற்றியை வீடுகளுக்குள் கொண்டாடுங்கள்!

## ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, மே 01

தேர்தல் நிலவரங்களை வீட்டில் இருந்தே ஊடகங்கள் மூலமாக தெரிந்து கொள்ளுங்கள் என்றும், வீட்டிற்குள் கொண்டாடுங்கள் எனவும் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவுகள் நாளை வெளியாகவுள்ளது. இந் நிலையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் தி.மு.க.தலைவர் ஸ்டாலின் பேசியதாவது:

கட்சியினரும், தொண்டர்களும் சட்டசபைத் தேர்தல் முடிவுகளை ஊடகங்கள் மூலமாக வீட்டில் இருந்தே தெரிந்துகொள்ளுங்கள்.



தேர்தலில் வெற்றி உறுதியானாலும் தேவையின்றி ஒன்றாகக் கூட வேண்டாம். தெருக்களில் வெற்றியை கொண்டாட வேண்டாம் வீட்டிற்குள் கொண்டாடுங்கள். கொரோனாவால் தமிழகம் தவித்து வரும் நிலையில் பெருந்தொற்றிற்கு தொண்டர்கள் ஆளாகிவிட வேண்டாம்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ரிஷாத் கைதுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களும் பங்கேற்றனர்

கொழும்பு, மே. 01

மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்தும், அரசியல் நாடகத்தை, அரங்கேற்றிக் கொண்டிருக்காமல், அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென கொழும்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

மக்கள் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பாயிஸின் ஏற்பாட்டில் கொழும்பு, தெவட்டகஹ பள்ளிக்கு அருகாமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கொழும்பின் பலபாகங்களிலும் இருந்து வருகை தந்த மக்கள் பங்கேற்றனர்.

ரிஷாத் பதியுதீனை விடுதலை செய், அநீதியான முறையில் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்திருக்காதே, நள்ளிரவில் கைது செய்ததன் பின்னணி என்ன?, யாரை திருப்திப்படுத்த இந்தக் கைது? போன்ற சுலோக அட்டைகளையும், பதாதைகளையும் தாங்கியவாறு, சமூக இடைவேளிகளை பேணி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றவேளை பொலிஸார் ஆங்காங்கே குவிக்கப்பட்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, முஜிபுர் ரஹ்மான், முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த அர்ஷத் நிசாம்தீன், மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரிப்கான், உயர்பீட உறுப்பினர்களான பாயிஸ், தாஹிர், அன்சில், நௌபர் மற்றும் முக்கியஸ்தர்களான ரம்சி, நிஜாம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், சகோதர சமூகத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ஆகியோர் போராட்டத்தில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட ராஜித சேனாரத்ன எம்.பி கருத்து தெரிவிக்கையில் -

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை அநியாயமாகக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். அவரின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது. அவர் முஸ்லிம்களின் தலைவர்களில் ஒருவர். கட்சித் தலைவராக இருக்கும் அவரை பின்கதவால் வந்து கைது செய்வதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அவர் என்ன பயங்கரவாதியா? குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்தபோதெல்லாம் அவர் தவறாமல் சென்று விசாரணைக்கு ஒத்துழைத்திருக்கின்றார். இது ஒரு பிழையான நடைமுறை. ஜனநாயகத்தை மீறும் செயல். எனவே, அவரை விடுதலை செய்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் யார்? என்பதை உடனடியாக அறிவியுங்கள்-என்றார்.

போராட்டத்தில் கலந்துகொண்ட முஜிபுர் ரஹ்மான் எம்.பி கருத்து தெரிவிக்கையில்-

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தொடர்ந்தேர்ச்சியாக ரிஷாத் பதியுதீனை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு அழைத்து, போதியளவு விசாரணை செய்தது. எனினும், அவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் நிரூபிக்க முடியாமல் போனது. ஜனாதிபதி ஆணைக்குழுவிலும் அவர் விசாரிக்கப்பட்டார். ஆனால், இறுதி அறிக்கையிலும் அவர் குற்றவாளியாக குறிப்பிடப்படவில்லை. இது முழுக்க முழுக்க எதிர்க்கட்சிகளை பழிவாங்கும், அவர்களை அச்சப்படவைக்கும் நடவடிக்கை. இதன்மூலம் இந்த அரசு தொடர்பில், எவரும் கேள்வி எழுப்பக் கூடாது என்ற ஒரு மறைமுகமான அச்சுறுத்தலே விடுக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிராக கருத்து தெரிவித்து வரும் ஹரின் மற்றும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அச்சுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யுங்கள் அல்லது அவர் மீது குற்றச்சாட்டு இருந்தால் நீதிமன்றத்தில் நிறுத்துங்கள். உங்கள் அதிகார பலத்தை பாவித்து பலாத்காரமான முறையில், பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி அவரை தடுத்து வைத்திருக்க வேண்டாம் - என்றார்.

# கொவிட் கொத்தணியின் பெயர் மாற்றப்பட்டது

கொழும்பு, மே. 01

புதிதாக கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை 'புத்தாண்டு கொவிட் கொத்து' என்று பெயரிட அரசாங்க தகவல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி அரசாங்க தகவல் திணைக்களத்தினால், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை வெளியிடப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த தகவல்களில், இந்த பெயர் முதல் முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்பான வழக்குகள் திவுலப்பிட்டி, பேலியகொட மற்றும் சிறைச்சாலை கொத்தணி போன்ற பல்வேறு பெயர்களினால் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர்களுக்காக சு.க. அரசை ஆதரிக்கும்

## மைத்திரிபால கூறுகின்றார்



கொழும்பு, மே. 01

பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக தொழிலாளர்களுக்கான வரப்பிரசாதங்களை பெற்றுக் கொடுக்க சுதந்திர கட்சி அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சுதந்திர கட்சி மற்றும் 8 தொழிற்சங்கங்கள் இணைந்து அரசாங்கத்திடம் 21 யோசனைகளை முன்வைக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் பரவலின் காரணமாக உலக நாடுகளைப் போன்று இலங்கையின் பொருளாதாரத்திற்கும் பாரிய சவால் ஏற்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டிருந்த அபிவிருத்திகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, சர்வதேச தொழிலாளர் தினத்தில் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதோடு தேசிய உற்பத்தி பொருளாதாரத்திற்கும் பங்களிப்பை வழங்குவோம்.

எனவே, அரசாங்கமானது சகலருடனும் ஒன்றிணைந்து இதற்கான தீர்வுகளைக் காண முயற்சிக்க வேண்டும். இதற்கு நட்புறவுடன் சுதந்திர கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் தயாராகவுள்ளது.

இதன் ஊடாக தொழிலாளர்களுக்கான வரப்பிரசாதங்களை பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். எனவே, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்துடன் பேச்சுகளை முன்னெடுப்போம் - என்றார்.

# தருமபுரம் வைத்தியசாலைக்குள் இறந்த கோழிகளை எறிந்த பெண்!

கிளிநொச்சி, மே. 01

கிளிநொச்சி தருமபுரம் பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்குள் சென்ற பெண் ஒருவர் இறந்த நிலையில் தான் கொண்டு சென்ற நான்கு கோழிகளை வெளிநோயாளர் பிரிவுக்குள் எறிந்து விட்டுச் சென்றார்.

இதன்போது அவர் அங்கிருந்த பணியாளர்களை நோக்கி, வைத்தியசாலையில் நீங்கள் வளர்க்கும் நாய்கள் தான் எனது கோழிகளைப் பிடித்து கொன்றுவிட்டன எனக் கோபத்துடன் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

ஆனால், வீதிகளில் உள்ள நாய்களே குறித்த கோழிகளை பிடித்ததாகவும், வைத்தியசாலையில் நாய்களை வளர்ப்பதில்லை எனவும் தெரிவித்த பணியாளர்கள், குறித்த பெண்ணின் செயல்பாடு தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

# காலி சிறைக்குள் போதைப்பொருள்

கொழும்பு, மே. 01

காலி சிறைச்சாலையில் மதிலுக்கு மேல் தொலைபேசிகள் , போதை மாத்திரைகள் உள்ளிட்டவற்றுடன் எறியப்பட்ட பொதியொன்று சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பொதிக்குள்ளிருந்து இரு தொலைபேசிகள் , 200 தொதை வில்லைகள் அடங்கிய இரு பக்கற்றுகள், ஹெரோயின் போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் இரு பக்கற்றுகள் மற்றும் 10 புகையிலைகளும் மீட்கப்பட்டுள்ளன. குறித்த பொதி தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் , காலி பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கொரோனா அச்சுறுத்தல்:

# பாராளுமன்ற அமர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டன

கொழும்பு, மே. 01

பாராளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் மே 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் மாத்திரம் நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொவிட்-19 சவாலை எதிர்கொண்டு, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த ஒத்திவைப்பு விவாதம் மே 4 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்புதுறைமுக நகர பொருளாதார ஆணையகத்தின் சட்டமூலம், இந்த மாதம் 5 ஆம் திகதி தாக்கல் செய்யப்படும். காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை முழு நாளிலும் விவாதத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் பொதுச்செயலாளர் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த இரு நாட்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்வழி கேள்விகளுக்கும், நிலையான ஆணை 27 (2) இன் கீழ் உள்ள கேள்விகளுக்கும் நேரமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஹரின் எம்.பி ஜூலை 14 வரை கைது செய்யப்படமாட்டார்

## சட்டமா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, மே. 01

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ ஜூலை 14 ஆம் திகதி வரை கைது செய்யப்படமாட்டார் என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்படுவதை தடுப்பதற்கான இடைக்கால உத்தரவு கோரி ஹரின் பெர்னாண்டோ தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு, நேற்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே சட்டமா அதிபர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வீதிகளில் இராணுவம் குவிப்பு!

## முகக்கவசம் அணியாதவர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்

**கிளிநொச்சி, மே 01**

**கிளிநொச்சி பிரதான வீதிகளில் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.**

முகக் கவசம் அணியாமலும், கொவிட் 19 சுகாதார நடை முறைகளுக்கு மாறாகவும் வரு கின்றவர்களை வழிமறித்து திருப்பி அனுப்பும் செயல் பாடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். கிளி நொச்சியில் பெரும்பாலான வீதிகளில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு பொது மக்களின் நடவடிக்கைகள் அவதானிக் கப்பட்டு வருகின்றன. இதன் போது சுகாதார நடைமுறை களை பின்பற்றாதவர்களுக்கு விளக்கமளிக்கப்படுவதோடு, அவர்கள் எச்சரிக்கை செய்து திருப்பி அனுப்பப்படுகின்றனர்.



## மணமக்களுக்கு கொரோனா உறவினர்களுக்கு பி.சி.ஆர்.

கொழும்பு, மே 01

பண்டாரவல எல்ல பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம் பெற்ற திருமண நிகழ்வில் மணமகன் மற்றும் மணமகள் உட்பட அவர்களது உறவினர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து திருமண நிகழ்வில் கலந்து கொண்ட 10 பேருக்கு நேற்று முன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை.

இதேவேளை, இந்தப் பகுதியிலுள்ள 5 இற்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்களிலிருந்து 30 இற்கும் மேற்பட்ட கொரோனா தொற்றா ளர்கள் இனங்காணப்பட்டனர் என்று சுகாதாரத் துறையினர் தெரி வித்தனர். (எ)

## வவுனியாவில் டிப்பரை வழிமறித்து வாள்வெட்டு

### சாரதி படுகாயம்

வவுனியா, மே 01

வவுனியா சோயா வீதிக்கு அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒரு வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாண்டிக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர்நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தை சோயா வீதிக்கு அண்மையில் வழிமறித்த இருவர் அதன் சார தியை வாளால் வெட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த சாரதி அங் கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவு னியா பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

## இத்தாலிக்குள் நுழைவதற்கு இலங்கையர்களுக்கு தடை!

ரோம், மே 01

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் தொகை அதிகரித்து வரும் நிலையில் இலங்கையர்கள் நாட்டுக்குள் நுழைய இத்தாலி தடை விதித்துள்ளது.

நேற்றுமுன்தினம் முதல் அமுலாகும் வகையில் இந்தத் தடை உத்தரவு அமுலுக்கு வந்துள்ளது.

வெளிநாட்டவர்கள் நாட் டுக்குள் நுழைவதற்கான தடை உத்தரவை இத்தாலி நேற்று முன் தினம் வியாழக்கிழமை புதுப்பித்தது. இதன்படி இலங்கை தடைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இத்தாலி சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஏனைய ஐரோப் பிய நாடுகளுக்கும் கொவிட் 19 பயணக் கட்டுப்பாடுகளையும் இத்தாலி அறிவித்துள்ளது.

பிற ஐரோப்பிய நாடுகளிலி ருந்து இத்தாலிக்குள் நுழை வோர் 5 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட் டுள்ளது. அத்துடன், வரும் போதும் தனிமைப்படுத்தல் காலம் முடிந்த பின்னரும் அவர்கள் கொவிட்19 தொற்று பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் எனவும் உத்தர விடப்பட்டுள்ளது.இதேவேளை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் பயணிகளுக்கும் ஏற்கனவே இத் தாலி தடை விதித்துள்ளது.

## வடக்கு வர்த்தகர்களின் பிரச்னைகளுக்கு உடன் நிரந்தர தீர்வு காணப்படவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

கொழும்பு, மே 01

வடக்கு மாகாணத்தினை சேர்ந்த வர்த்தகர்கள் எதிர்கொள் ளும் அசௌகரியங்கள் அனைத் திற்கும் நிரந்தர தீர்வு காணப் பட வேண்டும் என்று அமைச் சர் டக்ளஸ் தேவானந்தாவி னால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் வலியுறுத்தப்பட் டுள்ளது.

வர்த்தக அமைச்சில் இடம்



பெற்ற விசேட சந்திப்பின் போது, வடக்கு வர்த்தகர்களி னால் தன்னிடம் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகளை வர்த்தக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்ற கடற்றொழில் அமைச்சர், குறித்த கோரிக்கை கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத் தினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன, முன் னுரிமை அடிப்படையில் வடக்கு வர்த்தகர்களின் அனைத்து எதிர்பார்ப்புக்களும் நியாயமான முறையில் தீர்த்து வைக்கப்படும் என்று உறுதிய ளித்துள்ளார்.

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மீள்மதிப்பீட்டு பெறுபேறு வெளியீடு

கொழும்பு, மே.01

இம்முறை நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மீள் மதிப்பீட்டு பெறுபேறு நேற்று வெளியிடப்பட்டுள்ளது என பரீட் சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பெறுபேறுகள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

மீள்மதிப்பீட்டு பெறுபேறுகள் இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளதுடன், www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறு பேறுகளைப் பார்வையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## களுத்துறை சிறைச்சாலைக்குள் மேலும் 32 கைதிகளுக்கு தொற்று

கொழும்பு, மே. 01

களுத்துறை சிறைச்சாலையி னுள்ள 32 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 40 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவு கள் வெளியாகியுள்ளன.

அதிலேயே குறித்த 32பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அச்சிறைச்சாலையின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித் தார்.

மேலும் வைரஸ் தொற்றா ளர்களாக அடையாளம் காணப் பட்டவர்களை, சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் மற்றுமொரு சிகிச்சை நிலையத்துக்கு மாற்றுவதற் கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## முகக்கவசம் அணியாத ஒன்பது பேர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது!

கிளிநொச்சி, மே 01

முக கவசம் அணியாத ஒன் பது பேர் கிளிநொச்சி பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனரென தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முகக் கவசங்களுடன் நட மாடுமாறு பொலிஸார் நேற்று முன் தினம் முதல் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை பொலிஸாரின் சோதனை நட வடிக்கையின்போது 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸார் தெரிவித்தனர்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்ற தவறிய குற்றத்தின் அடிப்படையில் குறித்த நபர்கள் கிளிநொச்சி நகரில் கைது செய் யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனரெனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொதுமக்கள் நடமாடும் பகுதிகளில் இவ்வாறு திடீர் சோதனைகள் முன்னெடுக்கப் படும் எனவும், முக கவசம் இல்லாதவர்கள் கைது செய்யப் பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப் படுவார்கள் எனவும் பொலிஸ ார் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை தேவையற்ற நடமாட்டங்கள், கூடுகைகள் தொடர்பிலும் பொலிஸ் விசேட குழு தீவிரமாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் எனவும், பொதுமக்கள் தற்போது உள்ள நிலைமையை கருத் தில் கொண்டு பொறுப்புடன் செயல்பட வேண்டும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## சமூக இடைவெளியில் மாற்றம் செய்யவேண்டும்

கொழும்பு, மே 01

தற்போது நாடளாவிய ரீதியில் வேகமாக பரவிவரும் புதிய கொரோனா பரவலையடுத்து, இதுவரை காலமும் நபர்களுக்கு இடையில் பேணப் பட்டுவரும் ஒரு மீற்றர் சமூக இடைவெளியில் மாற்றம் மேற்கொள் ளப்படவேண்டும் என வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதற்கமைய, தற்போது கடைபிடிக்கப்பட்டுவரும், ஒரு மீற்றர் சமூகஇடைவெளி ஆகக்குறைந்தது 2 மீற்றர்களாக அதிகரிக்க வேண்டும் என இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் சீன சார்பு கொள்கை நாட்டுக்குப் பெரும்ஆபத்து!

## எச்சரிக்கின்றது ஐ.தே.க



**கொழும்பு, மே.01**

**அரசாங்கம் கொண்டிருக்கும் தவறான வெளி விவகார கொள்கையும் சீன சார்பு நிலையும் இலங்கைக்கு பேராபத்தாக அமையலாம். எனவே அரசாங்கம் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்-

அரசாங்கத்தின் தற்போதைய செயல்பாடுகள் ஆரோக்கியமானதாக இல்லை. இராஜதந்திர ரீதியாக ஏனைய நாடுகளுடன் பகையை ஏற்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயல்படுகிறது. சீன சார்புக் கொள்கை அதிகமாக வெளிப்படும் பட்சத்தில் இலங்கையின் சுயாதீன வெளிவிவகார கொள்கை சிதைவடைந்து போகும்.

நாட்டு மக்களும் இதனை நன்கு உணர்ந்துள்ளனர். அரசாங்கம் எந்தளவு சீன சார்பு நிலையில் உள்ளதென்பதை அறிந்துள்ளனர். இதன் வெளிப்பாட்டை சீன பாதுகாப்பு அமைச்சரின் வாகனத் தொடரணி சென்றவேளை போக்குவரத்து தடை ஏற்படுத்திய போது மக்கள் வெளிப்படுத்தினர்.

எனவே, அரசாங்கம் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளாவிடின் ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையே ஏற்படும்-என்றார்.

# தடுப்பூசிக்கு பதிலாக ரஷ்யாவிடம் ஹெலிகளை வாங்குகின்றது அரசு!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 01

கொரோனா தடுப்பூசிகளுக்கு பதில் அரசாங்கம் ரஷ்யாவிடமிருந்து ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்யவுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொவிட் வேகமாக பரவிவரும் நிலையில் மக்களின் துன்பங்களை தீர்ப்பதற்கான திட்டம் எதுவும் அரசாங்கத்திடமில்லை என குறிப்பிட்டுள்ள அவர், நாட்டுமக்களுக்கு அவசியமான தடுப்பூசியை பெறுவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கு பதில் அரசாங்கம் ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்ய முயல்கின்றது எனவும் அவர் கூறினார்.

ரஷ்யாவிலிருந்து இலங்கை இராணுவத்திற்கு நான்கு ஹெலிக்கொப்டர்களையும் சாதனங்களையும் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்வது முக்கியமான என தெரிவித்துள்ள அவர், பெருந்தொற்று நேரத்தில் தடுப்பூசியை விட ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்வது எவ்வளவு முக்கியமானது எனவும் கேள்வி எழுப்பினார்.

# மூன்று கர்ப்பவதி தாய்மார்கள் அதிதீவிர சிகிச்சை பிரிவில்

கொழும்பு, மே. 01

கொரோனா வைரஸ் தொற்றினால் ஆபத்தான நிலைமைக்கு உள்ளாகியுள்ள கர்ப்பவதி பெண்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டுமென மகப்பேற்றியல் மற்றும் மகப்பேறு மருத்துவர் சங்கம் எச்சரித்துள்ளது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட மூன்று கர்ப்பவதி தாய்மார்கள், தற்போது தீவிர சிகிச்சை பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருவதாக அதன் தலைவர் மருத்துவர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிழக்கு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் கர்ப்பவதி தாய், ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இத்தகைய சூழ் நிலையில் தாய்மார்கள், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றவேண்டியது மிகவும் அவசியமாகும் எனவும் பிரதீப் டி சில்வா கூறியுள்ளார்.

அந்தவகையில் குறிப்பாக அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் கர்ப்பவதி பெண்களுக்கு கொரோனா தொற்றின் பாதிப்பு அதிகளவு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, உடல் பருமன், நீரிழிவு நோய் அல்லது உயர் இரத்த அழுத்தம் உள்ள தாய்மார்கள், இதில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வேலை செய்யும் பொது இடங்களிலிருந்து விலகி இருப்பதும் மிகவும் முக்கியம் என பிரதீப் டி சில்வா குறிப்பிட்டார்.

# கொடிகாமம் சந்தை பூட்டு

யாழ்ப்பாணம், மே 01

கொடிகாமம் பகுதியில் வியாபாரிகள் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கொடிகாமம் சந்தை உட்பட்ட கொடிகாம நகர வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

வியாபாரிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை நடவடிக்கைப் பட்டுள்ளது . பி.சி.ஆர். முடிவுகள் வந்த பின்னர் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

# மாமன் தாக்கியதில் மருமகன் உயிரிழப்பு!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மே. 01

மாமன் தாக்கியதில் மருமகன் உயிரிழந்தார். கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 36 வயதுடைய குடும்பத்தர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக மாமனார் தாக்கியதில் படுகாயமடைந்த மருமகன் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் உயிரிழந்தவரின் மனைவி மற்றும் மாமனார் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த குறித்த நபர் 36 வயதுடைய பெருமாள் ரவிச்சந்திரன் என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# புலிகளின் நினைவுச் சின்னங்களை வடக்கு - கிழக்கில் அனுமதியோம்!

## பாதுகாப்பு செயலர் கூறுகிறார்

கொழும்பு, மே. 01

வடக்கு, கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவு கூரும் வகையில் நினைவுத் தூபிகளை அமைக்கமுடியாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாநகர சபை மேயர் மணிவண்ணன் மூலமாக இளைஞர்களுக்கு அணிவிக்கப்பட்ட ஆடை தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆடை தான். இந்தச் சம்பவம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

மேயர் என்ற காரணத்துக்காகவோ அல்லது வேறு அதிகாரியாக இருக்கும் காரணத்தினாலேயோ இளைஞர்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு வேறு ஆடைகளை அணிவித்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் செயல்பாடுகளை முன்னெடுப்பது சட்டவிரோதமானது.

குறித்த இளைஞர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆடையே அணிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே யாழ். மேயரை உடனடியாகக் கைது செய்து சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்தோம். அதேபோல, எதிர்காலத்திலும் எவரேனும் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பின்னிற்கமாட்டோம்.

இந்த நாட்டில் வடக்கிலோ அல்லது தெற்கிலோ இளைஞர்கள் மீண்டும் ஒரு கஷ்ட நிலைமையைச் சந்திக்கும் சூழல் உருவாக நாம் இடமளிக்கமாட்டோம்.



யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் தூபியே தவிர, தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூரும் தூபி அல்ல. வடக்கிலோ, கிழக்கிலோ பயங்கரவாத அமைப்பை நினைவு கூரும் நினைவுத்தூபிகளை உருவாக்க நாம் இடமளிக்கமாட்டோம்-என்றார்.

# தனிமைப்படுத்தல் நிலையங்கள் வைத்தியசாலைகளாக மாறும்

கொழும்பு, மே. 01

"கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும் பட்சத்தில், அரசால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்கள் இடைக்கால வைத்தியசாலைகளாக மாற்றப்படும்." என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 12 ஆயிரம் பேர்வரை இருக்கின்றனர். அவர்களை பராமரிப்பதென்பதே சவாலுக்குரிய காரணம். எனவே, தனிமைப்படுத்தல் நிலையங்கள் இடைக்கால வைத்தியசாலையாக மாற்றப்படும்பட்சத்தில், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை அழைத்துவரும் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் இடைக்கால வைத்தியசாலையொன்று அமைக்கப்படும் என மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் தெரிவித்தார். சுமார் 2 ஆயிரம் பேருக்கு சிகிச்சையளிக்கும் வகையில் குறித்த வைத்திய சாலை படையினரின் உதவியுடன் நிறுவப்படும் எனவும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி சி.ஜெயசங்கர்

# அனர்த்த, பேரனர்த்த நீக்கத்திற்கான வாழ்தலைப் பேசும் நிர்மலவாசனது ஓவிய இயக்கம்



எந்த வகையிலான ஊடகங்களிலும், எந்தவிதமான இடங்களிலும் ஓவியப் படைப்புக்களை காண்பியக்கலை ஆக்கங்களை உருவாக்கவும், காட்சிப்படுத்தவுமான இயல்பு சுசிமன் நிர்மாலவாசனுக்குரியது. அவரது படைப்பாக்கத்திற்கான கருவூலங்களான மக்களதும் சூழலினதும் இணைவைப் பேணுவதிலும் கவனம் கொண்டிருப்பதை அவருடைய ஓவியக் காட்சிப்படுத்தல்கள் புலப்படுத்தி நிற்கின்றன.

இதேவேளை காலனியம் அறிமுகப்படுத்திய நவீன அறிவியலின் அம்சமான நவீன ஓவியம் வரிக்கின்ற 'தராதரங்களிலும்' தடம் பதித்தவராக ஆனால் அதனால் தீர்மானிக்கப்படாதவராக இயங்குவதையும் காணமுடிகின்றது.

நவீன ஓவிய உலகின் அதிகார அல்லது அங்கீகார பீடமாகக் கொள்ளப்படுகின்ற கலைக்கூடங்களில் காட்சிப்படுத்தலுக்கான அவாவற்ற இளம் ஆளுமையாக சுசிமன் நிர்மலவாசன் இயங்குவது மிகுந்த கவனத்திற்கும், கற்றலுக்கும் உரியது.

மேலும், ஓவியப் படைப்பாக்கம் என்பது சிறப்புத் தேர்ச்சி பெற்ற வல்லுனர்களது விடயம் மட்டுமல்ல, எல்லா மனிதருள்ளும் படைப்பாக்கத் திறன் உள்ளுறைந்து காணப்படுகின்றது என்ற நம்பிக்கை கொண்டவராகவும் நிர்மலவாசன் விளங்குகின்றார்.

சிறுவர்கள், இளையவர்கள், மூத்தோர்களுடன் இணைந்து ஓவிய, காண்பியக்கலை உருவாக்கங்களை முன்னெடுப்பது, காட்சிப்படுத்துவது என்பதும் நிர்மலவாசனது கலையாகவும் இருக்கின்றது.

காட்சிப்படுத்தல்களின் போது மீளுருவாக்கம் பெறும், விரிவாக்கம் பெறும், முழுமை பெறும் ஓவிய ஆக்கங்களது உரித்தாளராகவும் நிர்மலவாசன் விளங்குகின்றார்.

இந்தவகையில் படைப்பாக்க ஆதிக்க நீக்கம் பற்றிய சிந்தனைக்கான அறிவியல் வளமாக வாசனின் ஓவிய ஆக்க முன்னெடுப்புக்கள் காணப்படுகின்றன.

இத்தகைய வித்தியாசமானதும் சிறப்புத்தன்மை வாய்ந்ததுமான இயக்கத்தின் மூலம் பற்றிச் சிந்திக்கும் பொழுது ஓவியர் அ.மாற்கு முன்வந்து நிற்கின்றார். முற்றுகைக் காலங்களிலும், பொருளாதாரத்தடைக் காலங்களிலும் பாடசாலைப் பிள்ளைகள் பயன்படுத்தும் ஓவியம் வரைதலுக்கான குறைந்த பட்ச ஊடகங்களோ வளங்களோ கிடைக்காத சூழலிலும் பால்மா பொருட்கள், பிஸ்கட்டுக்கள் பொதி செய்யப்பட்டு வரும் காட்போட் மட்டைகளில் கரித்துண்டுகளால் ஓவியங்கள் வரைந்து சுவர்களிலோ, வேலிகளிலோ தொங்க விட்டு உரையாடல்களை உருவாக்கியவர் ஓவியர் அ.மாற்கு

ஓவியர் அ.மாற்குவின் மாணவர்களும் இந்த வகையினரே ஓவியர் கமலா வாசுகியினது ஓவிய முன்னெடுப்புக்கள் இதன் தொடர்ச்சியும் விரிவாக்கமும் கொண்டவை. பெண்களுடன் இணைந்து கூட்டுக்கலை ஆக்கங்களை நிகழ்த்துவது காட்சிப்படுத்துவது உரையாடல்களை முன்னெடுப்பது என்பதாக இச்செயற்பாடுகள் காணப்படும். கைவிடப்பட்ட, சூழலுக்கு நட்பான பொருட்களைக் கையாண்டு காண்பியக்கலை ஆக்கங்களும், காட்சிப்படுத்தல்களும் நிகழ்த்தப்படும். இவை பொது அல்லது வெகுசன உரையாடலுக்கானதாக வடிவமைக்கப்பட்டிருக்கும்.

வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களுடன் இணைந்து உள ஆற்றுப்படுத்தலாகவும், உணர்வு வெளிப்பாடாகவும், எதிர்ப்புக் குரலாகவும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தலுக்குக் கொண்டுவரப்படும் ஆக்கங்கள் பொது வெளிகளிலேயே உருவாக்கப்படும் ஆக்கங்கள் என்பவை வாசனது வித்தியாசமான உருவாக்கத்திற்கும் இயக்கத்திற்குமான முன்னோட்டங்களாக இருந்திருக்கின்றன.

இத்தகைய செயல்பாடுகளின் முக்கியமான முன்னெடுப்பாளராகவும் வாசனது இயக்கம் விரிவாக்கம் பெற்றிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடலும், வயல் வெளியும், வாவியும், கண்ணாக்காடுகளும் சூழ்ந்த இயற்கைச் சூழலில் மனிதராலும் இயற்கையாலும் ஏற்பட்ட ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற பேரனர்த்தங்களின் சிதைவுகளிடை வாழ்தலைப் பேசுவதையும், அனர்த்த, பேரனர்த்த நீக்கத்திற்கான வாழ்தலைப் பேசுவதையும் வாசனது ஓவிய இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயல்பாடுகளுக்கான நண்பர்கள் குழாம், வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர் குழாம் என்பவற்றில் ஆழ்ந்த ஈடுபாடும் இயக்கமும் வாசனது பார்வையையும் நிலைப்பாட்டையும் தீர்மானித்திருக்கின்றது என்பதை அவரது ஓவியங்கள், ஓவிய ஆக்க முறைமைகள் காட்சிப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் முறைகளில் கண்டுகொள்ளலாம்

வாசனின் தேடல் அவரது கலை வாண்மையையும் ஆளுமையையும் தீர்மானித்திருக்கின்றது. கலை நிறுவனமொன்றிற்கூடாக எத்தகைய ஆளுமைகள் அல்லது பட்டதாரிகள் உருவாக்கப்படுகிறார்கள்? வாசனைப் போன்ற ஆளுமைகளைக் கலை நிறுவனங்களுக்கூடாக உருவாக்க முடியுமா? முடியுமாயின் அதன் முறைமை எத்தகையதாக இருக்க வேண்டும், என்பவை முக்கியமான உரையாடலுக்குரியவை.

வாசனது ஓவியங்களில் மீன்களும், கருவாடும், கண்ணாக்காடும் முக்கிய இடம் பிடித்திருப்பவை. மனிதர்களின் அனுபவங்களைக், கதைகளை அவர்கள் வாழும் இயற்கைச் சூழலின் உருவங்கள், படிமங்கள் மூலம் முழுமை பெறச்செய்து படைப்பாக்கியுள்ளார்.

காட்சிப்படுத்தும் வெளியையும் ஓவிய ஆக்கங்களையும் இணைத்து நினைவு கூருதலூடாக ஓவியங்களாகக் கதைகளை எழுதுபவர் ஓவியர் சுசிமன் நிர்மலவாசன். பன்குடாவெளி கண்ணாடிப் போடியாரின் பாழடைந்த வீட்டில் காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்கள் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும்,

நவீன ஓவியத்தின் அதிகார அல்லது அங்கீகார பீடமான ஓவிய கூடங்களுக்குச் சவாலானதும் படிப்பினையுமான ஓவியக் காட்சிப்படுத்தலாக வாசனது 'பன்குடாவெளி 90' கண்ணாடிப்போடியாரின் பாழடைந்த வீட்டு ஓவியக் காட்சிப்படுத்தல் அமைகின்றது.

வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியக் குழாத்தின் காட்சிப்படுத்தல்களின் நீட்சியாக இது அமைகின்றது.

கலை ஆக்கங்களின் வலிமை கலைக் காட்சிப்படுத்தல்களின் வலிமை அதிகாரமிக்க இடங்களில் அவை வைக்கப்படுவதில் அல்ல, அப்படைப்புகள் கிளர்த்தும், தொடர்புபடுத்தும், இணைக்கும் பல அனுபவங்களைக் கொண்டுவரும் சூழலையும் சூழ்நிலையையும் உருவாக்குவதில் தங்கியிருக்கிறது என்பதை மேற்படி காட்சிப்டுத்தல்கள் உணர்த்தி இருக்கின்றன.

இந்தவகையில் சுசிமன் நிர்மலவாசனின் நினைவு கோருதல் என்ற தலைப்பிலான 21 ஓவியங்களை உள்ளடக்கிய ஓவியக் காட்சிப்படுத்தல் அவரது இன்னொரு பரிமாணமாகக் காணப்படுகின்றது.

சிறுவயதில் அவரறிந்த கதைகள், அவர் விளையாடிய விளையாட்டுகள் அவர் வாழ்ந்த சுற்றம் சூழல் என்பவற்றிற்கு பின்னாளில் என்ன நடந்து விட்டிருக்கிறது என்பதை அவரது சிறுபராயத்து நினைவுகள், சிறுபராயத்து வெளிப்பாட்டு முறைமைகள், சுற்றுச் சூழலும் சுற்றமும் என்பதாக ஓவியங்கள் சமகாலத்துக் கதைகளை வண்ணங்களின் வழி பேசுகின்றன.

இந்த ஓவியக்காட்சி 2021 ஏப்ரல் 29 முதல் தினமும் காலை 10.00 மணி தொடக்கம் நள்ளிரவு வரை கொழும்பில் பரடைஸ் ரோட் கலரியில் இடம்பெறுகின்றது.

இலங்கையின் சமகால ஓவியப்பின் புலத்தில் மிகவும் வித்தியாசமான ஓவியங்களின் காட்சியாக இது அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ரூபாய் பிரச்னை தீர்ந்துவிட்டதா?

**நோட்டன் ராம்**



பல வருடங்களாக இழுபறி நிலையில் இருந்து வந்த மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பளக் கோரிக்கையானது பல விமர்சனங்கள், இழுத்தடிப்புகள் மற்றும் ஆயிரத்தையும் கடந்த பல பிரச்சினைகளுக்கு மத்தியில் நிறைவேறியுள்ளது.

ஆயிரம் ரூபாய் நாள் சம்பளத் தொகை தொழிலாளர்களின் 2021 ஏப்பிரல் மாத சம்பளப் பட்டியலில் சேர்க்கப்பட்டதுடன் தோட்டத் தொழிற்துறையில் நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் கரம் கிட்டியது.

ஆயிரம் ரூபாய் நாள் சம்பளம் வாங்கிய பின்னர் தற்போது தோட்டத் தொழிற்துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் வேறு வடிவிலான பிரச்னைகளும் எழுந்துள்ளது. தோட்டங்களை நிர்வகித்து வரும் 25 பெருந்தோட்டக் கம்பனிகள் அரசாங்கத்திடம் இருந்து 1992 ஆம் ஆண்டு தோட்டங்களை குத்தகை அடிப்படையில் பொறுப்பேற்றுக்கொண்டன.

அதன் பின்னர் தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம் பளத்தை 'கூட்டு ஒப்பந்தம்' என்ற முறைமை அடிப்படையில் வழங்குவதற்கு மலையகத்தில் பிரதான தொழிற்சங்கங்களாக செயற்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், கூட்டு கமிட்டி ஆகியவற்றுடன் ஒப்பந்தம் ஒன்றை 1998ஆம் அண்டு காலப்பகுதியில் செய்து கொண்டன.

இந்த ஒப்பந்தத்தில் சம்பளம் சார்ந்த விடயங்களை மாத்திரம் கவனத்திற் கொள்ளாது, தோட் டத் தொழிலாளர்களின் சில நலன்சார் விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை 5ரூபா முதல் 100 ரூபா என்ற எல்லைக்குள்ளேயே சம்பள உயர்வும் இடம் பெற்று வந்துள்ளது. பல பிரச்சினைகள் ஆர்ப்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள் என பல சிரமங்களுக்கு மத்தியிலேயே தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு முறை கூட்டு ஒப்பந்த புதுப்பித்தலின் போதும் சம்பளம் அதிகரிக்கப்பட்டது என்பதே வரலாற்று உண்மை. கடந்த கால வரலாற்றை எடுத்துபார்த்தால் 1998 முதல் 2016 வரை வேறுபட்ட வீதங்களில் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது. அது 6 சதவீதமாகவும் 40 சதவீதமாகவும் கூட அமைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு தொடர்ந்து செல்லும் நிலையில் காலம் காலமாக அரசியல் தேவைகளுக்காக குறிப்பாக தேர்தல் காலம் நெருங்கும் காலப்பகுதியில் கட்சியின் இரு தரப்பினரும் ஏலம் கூவுவது போல நாங்கள் வந்தால் ஆயிரம் தருவோம் , 1500 தருவோம் என்பது தேர்தல் கால கோஷமாக இருந்தது.

இந்நிலையில், 2015ஆம் ஆண்டு தேர்தல் காலப்பகுதியில் 1000 பெற்றுக் கொடுப்போம் என கூறிய இரண்டு தரப்பும் இப்போது கூட்டு ஒப்பந்தத்தை கைவிட்டு, சம்பள நிர்ணய முறைமை எனும் அடிப்படையில் ஆயிரம் ரூபாய் நாள் சம்பளத்தினைப் பெற்றுக் கொடுத்துள்ளன. ஆயிரம் ரூபாய் என்பது எனது தந்தையின் கனவு அதனை நிறைவேற்றி விட்டேன் என ஆத்ம திருப்தி அடைந்தவராக உள்ளார் ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வை கோரிய காலத்தில் இருந்த வாழ்க்கைச் செலவும் அத்தொகை வழங்கப்பட்ட காலத்தில் 2 ஆயிரமாக கோர வேண்டிய வாழ்க்கைச் செலவுக்கு வந்துவிட்டது. இதனை புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ள மலையக தோட்டத் தொழிலாளர்கள் பட்டாசு கொழுத்தி ஜீவன் தொண்டமானையும் அதனோடிணைந்த காங்கிரஸையும் கொண்டாடுகின்றார்கள்.

**ஆயிரத்தால் இழந்தவை...**

கூட்டு ஒப்பந்தம் எனும் முறைமையினால் மக்கள் பல சலுகைகளை அனுபவித்து வந்தனர். சுகாதார நலன்சார் விடயங்கள் உட்பட பல நலன்களை அனுபவித்தனர். பொதுவாக நாளொன்றுக்கு பறிக்கும் தேயிலை கொழுந்தின் அளவு 12 கிலோவாக (கொழுந்து இல்லாத வறட்சியான காலப்பகுதியில்) இருந்தாலும் அன்றைய நாளுக்குறிய முழுமையான சலுகையுடன் கூடிய சம்பளத் தொகை கிடைத்து வந்தது.



**ஆயிரம் ரூபாய் அதிகரிப்பின் பின்னர் கண்டிப்பாக நாளொன்றுக்கு 20கிலோ கொழுந்து பறிக்கவேண்டும் என்றும் அவ்வாறு தவறும் பட்சத்தில் குறிப்பிட்ட ஆயிரத்தை எட்டமுடியாது என்றும் தோட்டங்களை நிர்வகித்து வரும் பெருந்தோட்டக் கம்பனிகள் தரப்பில் நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாக தோட்டத் தொழிலாளர்கள் சொல்கின்றார்கள்.**

ஆனால், ஆயிரம் அதிகரிப் பின் பின்னர் கண்டிப்பாக நாளொன்றுக்கு 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்றும் அவ்வாறு தவறும் பட்சத்தில் குறிப்பிட்ட ஆயிரத்தை எட்ட முடியாது என்றும் தோட்டங்களை நிர்வகித்து வரும் பெருந்தோட்டக் கம்பனிகள் தரப்பில் நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாக தோட்டத் தொழிலாளர்கள் கவலையடைகின்றனர்.

அது மாத்திரமன்றி பல தோட்டங்களில் இவ்வாறான நடவடிக்கையை கண்டித்து தோட்ட நிர்வாகத்திற்கெதிராக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். தோட்ட நிர்வாகம் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாதெனவும் அது பற்றிதான் பேசியிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சரும் ஆயிரத்தை பெற்றுக்கொடுத்ததாக மார்த்தட்டிக் கொள்பவருமான ஜீவன் தொண்டமான் கூறிக்கொண்டு வருகின்றார். இவ்வாறு அவர் கூறினாலும் நாளுக்கு நாள் தொழிலாளர்கள் அழுத்தங்களுக்கு உள்ளவதாக தெரிவிக்கின்றனர்.

ஆயிரம் கிடைத்திருந்தாலும் அதனுடன் தொடர்புடைய தான வழக்கொன்று நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமையினாலும் வாதத்திற்கு இன்னும் குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்படாத நிலைமை இருப்பதாலும் சம்பளம் விடயம் தொடர்பில் எவரும் மேலதிகமாக தலையிட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை. கொழுந்து நிரம்பிய இந்த காலகட்டத்தில் நாட் சம்பளத்திற்கு அதிகமாக கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களுக்கான மேலதிக அளவுக்கான கொழுந்துக்கான கொடுப்பனவு நிலைமையும் என்னவாகுமென்ற அச்ச நிலைமையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

சில தோட்ட நிறுவனங்களில் தேயிலை கொழுந்து பறிக்காது ஏனைய தொழில்களில் , சில தொழிலாளர்கள் ஈடுபட்டு வரும் நிலையில் அதில் ஆட்கள் குறைப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றது. பெருந்தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டு சுமார் 25 ஆண்டுகளில கூட்டு ஒப்பந்தம், சம்பள நிர்ணய சபை முதலான குழப்பகரமான சூழல்களும் அமைந்தன. கூட்டு ஒப்பந்த முறையில் சில சரத்துக்கள் பேரளவில் சம்பள அதிகரிப்பைத் தருவதாக தயாரித்து விட்டு உள்ளே அந்த சம்பளம் கிடைக்க முடியாதவாறான சரத்துகள் சேர்க்கப்படுகின்றன.

குறிப்பாக 75 சதவீத வரவு பதிவு செய்தால் மாத்திரமே அவர்கள் வேலை செய்யும் அத்தனை நாளுக்குமான 60 ரூபாய் சம்பள அதிகரிப்பு கிடைக்கும் என்பதாகும். இது அவ்வாறு அமையாதவாறு தொழிலாளர்கள் முகாமை செய்யப்படுகிறார்கள். அதே போல அவர்களது தொழில் திறன் அடிப்படையில் வழங்கப்படுவதாக சொல்லப் படும் 140 ரூபாயும் இந்த வேலைநாள் எண்ணிக்கைக்கு ஏற்ப மட்டுப்படுத்தப் படுவத னால் ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்படும் தொகையை விட மிகக்குறைந்த வருமானமே அவர்களுக்கு கிடைத்துள்ளது. கூட்டு ஒப்பந்தம் இப்போது இல்லாத விடத்து இப்போதும் அதனடிப்படையிலேயே சம்பள உயர்வு உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு பெருந்தோட்டங்கள் தனியார் மயப்படுத்தலுக்கு உள்ளானதன் பின்னர் அந்தப் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் அரசாங்கம் கொண்டிருந்த கட்டுப்பாடுகள் அதிகாரங்கள் எல்லாமே இழக்கப்பட்டன. சம்பளநிர்ணய சபைச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கமும் ஓர் அங்கமாக பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் வாய்ப்பு இழக்கப்பட்டது.

தொழிலாளர்கள் - நிர்வாகம் இவ்வாறு இரு தரப்பிலும் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், இத்தொகையை பெற்றுக்கொடுத்தது வெற்றி என கொண்டாடும் தொழிற்சங்க அனுபவம் ஏதும் இல்லாத இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், மேற்படி சம்பவங்கள் குறித்து தான் பெருந்தோட்ட கம்பனி நிர்வாகத்துடன் பேசியுள்ளதாகவும் அவர்கள் தொழிலாளர்களுக்கு எவ்வித அழுத்தமும் கொடுக்கவில்லை எனவும் இவ்வாறு தொடர்ச்சியாக நடக்காது என்றும் தெரிவித்திருக்கின்ற போதிலும் தொழிலாளர்கள் நாளாந்தமாக ஆயிரம் பெறுவதற்கான அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

எனவே, கூட்டு ஒப்பந்தம், சம்பள நிர்ணய சபை ஆகிய முறைமைகள் தோல்வியடைந்த முறைமைகளாக நன்றாக தெரிந்து விட்ட நிலையில் தென்னிலங்கையில் போன்று மலையகத்திலும் தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உடமையாக்குவதே மலையக மக்களின் பொருளாதார வாழ்வாதார பிரச்னைக்கு நிரந்தர தீர்வைத் தரும். அதற்கு தொழிற்சங்க நடவடிக்கைகள் மட்டும் போதாது. காத்திரமான அரசியல் முன்னெடுப்புகளே தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைச் சிகரம்


## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 1 நேரம் - 45 நிமிடம்
வினாத்தாள் 1 ஆசிரியர் - மு.வே.அன்பழகன்


கல்வி TV CHANNEL-1


* தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

01) 



1. 2. 3.

02) 



1. 2. 3.

* பின்வரும் வினாக்களுக்குப் படத்துடன் தொடர்புடைய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

03) 

1. இயற்கை 2. இரவு 3. குளிர்மை

04) 

1. காடு 2. மாமிச உண்ணி 3. நன்றியுணர்வு

* பின்வரும் கட்டங்களில் வேறுபட்ட சொல் இடம்பெறும் கட்டத்தைத் தெரிவு செய்க.

05)

| 1. | 2. | 3. |
|---|---|---|
| மாம்பழம்<br>வாழைப்பழம்<br>பலாப்பழம் | தக்காளி<br>வெண்டி<br>மரக்கறி | வட்டம்<br>சதுரம்<br>முக்கோணி |


06)



| 1. | 2. | 3. |
|---|---|---|
| வைத்தியர்<br>நோயாளி<br>தாதி | அதிபர்<br>ஆசிரியர்<br>மாணவர் | சந்தை<br>வியாபாரி<br>நூலகம் |

* வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




07) 3, 43, 543, ..........

1. 4563 2. 6543 3. 7543

08) 

1.  2.  3. 


09) நான்கு சமச்சீர் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்க.

1.  2.  3. 

10) 415, 315, 515 இவ்வெண்களை மூன்றால் வகுக்கும் போது மீதியின்றி வகுபடும் எண்?

1. 415 2. 315 3. 515

11) பாத்திரம் A யை முழுமையாக நிரப்புவதற்கு பாத்திரம் B ஆல் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?




1. 4 தடவைகள் 2. 5 தடவைகள் 3. 6 தடவைகள்

12) பின்வரும் எழுத்துக்களைக் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் எழுத்துக்கள்.

1. T, Q 2. R, A 3. V, A

13) கீழே தரப்பட்டுள்ள எண்களுக்கும் அவற்றைச் சுற்றி வரையப்பட்டுள்ள உருக்களுக்கும் ஏற்ப எண் 60 ஐச் சுற்றி வரையப்பட வேண்டிய உரு எது?




1. 2. 3.

14) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1. நாம் கடைமைகளை நிறைவேற்றுவோம்.
2. நாம் கடமைகளை நிறைவேற்றுவொம்.
3. நாம் கடமைகளை நிறைவேற்றுவோம்.


15) 'திடசங்கற்பம்' என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்க முடியாத சொல்

1. கபடம் 2. சங்கம் 3. சாகசம்

16) ஒரு பாடசாலையில் ஒரு குறித்த விழாவின் தொடக்கத்தில் 9 மெழுகுவர்த்திகள் கொளுத்துவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒரு மெழுகுவர்த்தி ஒளிரும் நேரம் 30 நிமிடம் ஆகும். 9 மெழுகுவர்த்திகள் ஒரே தடவையில் கொளுத்தினால், அவை எல்லாம் எவ்வளவு நேரத்திற்கு ஒளிரும்?


1. 30 நிமிடம் 2. 270 நிமிடம் 3. 300 நிமிடம்

17) A, B, C, D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகப் பெரிய இலக்கத்தைப் பயன் படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண் யாது?




1. 9 765 2. 5 679 3. 2 348

18) இங்கு தரப்பட்டுள்ள உருவில் எண்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப உள்ளன. இக் கோலத்திற்கேற்ப ◯ இருக்கும் இடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?




1. 24 2. 12 3. 6

19) 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும்போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்பட வேண்டும்?

1. 10 2. 19 3. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் ஆரம்பம்; இறுதித்தீர்மானம் நாளை

கொழும்பு,மே.01

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் நாளை ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் மாகாண மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து இதுதொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைகளை மீண்டும் திறக்கும் போது பிரதானமாக மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என கல்வி அமைச்சர் கூறினார். (எ)



# ஜனாதிபதி ஊடக பேச்சாளராக கிங்ஸ்லி ரத்நாயக்க நியமனம்

கொழும்பு,மே.01

சிரேஷ்ட ஊடகவியலாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க, ஜனாதிபதி ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அவர் தனது நியமனக்கடிதத்தை பெற்றுக் கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆவார். (எ)

# மே தின நிகழ்வுகள் ரத்து; ஐக்கிய தேசிய கட்சி முடிவு

கொழும்பு,மே.01

நாட்டில் நிலவும் கொரோனா அச்ச நிலைமைகள் காரணமாக, கட்சியின் மே தின நிகழ்வுகளை இரத்துச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி கட்சியின் அனைத்து மே தினக் கொண்டாட்டங்களும் நிறுத்தப்படும். முன்னதாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோருடன் மே தின நிகழ்வுகளை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டிருந்தது.

எனினும், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடலைத் தொடர்ந்து தற்போதைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (எ)

ஜனாதிபதி கோட்டாபய வழிவிட வேண்டும்:

# நாட்டை பாதுகாக்கும் பொறுப்பை பிரதமர் மஹிந்த ஏற்க வேண்டும்

முருத்தெட்டுவே ஆனந்த தேரர் வலியுறுத்து



கொழும்பு,மே.01

**அமைச்சரவை அமைச்சர்கள் நாட்டைப் பலி கொடுத்தாவது தங்களின் அமைச்சுப் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வார்கள். கொரோனா வைரஸ் தாக்கத்தால் நாடு பெரும் விளைவுகளை எதிர் கொள்ள நேரிடும். ஆகவே, இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆலோசனைகளைப் பெற வேண்டும். கொரோனா தாக்கத்தால் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொண்டு நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை பிரதமர் ஏற்க வேண்டும். அரச சேவை முழுமையாகப் பலவீனமடைந்துள்ளது. இந்நிலைமை தொடர்ந்தால் அரசும் பலவீனமடையும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா வைரஸ் முதலாம் அலை தாக்கத்தின் போது அரசாங்கம் பொறுப்புடன் செயல்பட்டது. சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை நாட்டு மக்கள் முறையாகப் பின்பற்றினார்கள். இதன் காரணமாக நெருக்கடி நிலையை அப்போது வெற்றி கொள்ள முடிந்தது. ஆனால், தற்போது அவ்வாறு இல்லை.

கொரோனா வைரஸ் குறித்து சுகாதார அமைச்சு பொறுப்புடன் செயல்படவில்லை. கொரோனா வைரஸ் சாதாரண ஒரு தடிமன் என்று நாட்டு மக்கள் அலட்சியப்படுத்தும் அளவுக்கு சுகாதார அமைச்சு பொறுப்பற்ற வகையில் செயல்பட்டது. வைரஸின் தாக்கம் குறித்தும், முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்தும் எவ்வித திட்டங்களும் வகுக்கப்படவில்லை.

புத்தாண்டு காலத்துக்குப் பிறகு கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. சுகாதார அமைச்சின் பலவீனத்தன்மை கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையின் ஊடாக வெளிப்பட்டுவிட்டது.

அரச நிர்வாகம் பலவீனமடைந்துள்ளது. கிராமத்தில் உள்ள அடிப்படை பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்துவது சிறந்தது. அவ்வாறே அரச சேவை குறித்தும், அமைச்சர்கள் குறித்தும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் குறித்துக் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. இவர்கள் அனைவரும் நாட்டை பலி கொடுத்தாவது தங்களின் அமைச்சு பதவிகளை பாதுகாக்க முயற்சிப்பார்கள்.

நாடு தற்போது எதிர்க்கொண்டுள்ள பாரதூரமான நிலை குறித்து அவர்கள் அக்கறை கொள்ளவில்லை என்பதை அவர்களின் செயல்பாடுகளின் ஊடாக அறிந்துகொள்ள முடிகிறது.

கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து அதிக அவதானம் செலுத்த வேண்டும். இந்தியாவின் தற்போதைய நிலைமை அபாயகரமானது. ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

கொரோனா விவகாரம் தொடர்பிலான அனைத்துப் பொறுப்புக்களையும் ஜனாதிபதி, பிரதமரிடம் ஒப்படைக்க வேண்டும். நாட்டு மக்களை பாதுகாக்கும் பொறுப்பு அவருக்கு மாத்திரம் உண்டு.

நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து நாட்டையும், மக்களையும் அவர் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை மக்களுக்கு முழுமையாக உள்ளது- என்றார். (எ)

# மக்களுக்கு கொரோனா நிலைமை தொடர்பில் உண்மை தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டதா?

ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு,மே.01

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனைகளில் அளவு குறைவடைந்தமையே தொற்றாளர்கள் எண்ணிக்கையும் குறைவடைந்தமைக்கான காரணமாகும். ஏன் இவ்வாறு தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைவாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது? கொவிட் நிலைமை தொடர்பில் மக்களுக்கு உண்மையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டதா என்ற சந்தேகம் நிலவுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த வாரங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு குறைவடைந்தமையே மிகக் குறைந்தளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமைக்கான காரணமாகும். இவ்வாறான சூழலில் கடந்த காலங்களில் கொரோனா நிலைமை தொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு உண்மைத் தரவுகளை வெளிப்படுத்தியதா? என்ற சந்தேகம் எழுகிறது. நாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஏன் குறைவாகக் காண்பிக்கப்பட்டது?

புத்தாண்டின் போது சுகாதார விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படாவிட்டால் வைரஸ் பரவல் தீவிரமடையும் என்று சுகாதாரத் தரப்பினர் எச்சரித்த போதிலும், அரசாங்கம் அதற்கான எவ்வித ஏற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை.

தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கையிலும் ஏற்படுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அவ்வாறான நிலை தோன்றினால் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

ஆனால், தற்போது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு தனிமைப்படுத்துவதற்கான வசதிகள் இலங்கையிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இது மிகவும் அபாயமானதாகும்.

கொரோனா தொற்று காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால், அதனை நிவர்த்தி செய்வதாகக்கூறி அரசாங்கம் அதன் சகாக்களுக்கு இலாபத்தை ஈட்டிக்கொடுப்பதற்காக இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்கிறது- என்றார். (எ)

# இந்திய - இலங்கை உறவு உயர்நிலைக்கு

இந்திய தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,மே.01



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள சந்தர்ப்பத்தில் இந்தியாவுடன் கூட்டொருமைப்பாட்டுடன் செயல்படும் இலங்கை தலைமைத்துவத்துக்கு நன்றி தெரிவித்துள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, சகல துறைகளிலும் இருதரப்பு உறவை உயர் நிலைக்கு இட்டுச்செல்ல பிரதமரின் வழிகாட்டுதலை கோருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா தொற்று பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள இக்காலத்தில் இந்தியாவுடனான கூட்டொருமைப்பாட்டுடன் செயல்படும் இலங்கை தலைமைத்துவத்துக்கு தெரிவிப்பதாகவும், சகல துறைகளிலும் இருதரப்பு உறவை உயர்நிலைக்கு இட்டுச்செல்ல பிரதமரின் வழிகாட்டுதலையும் கோருவதாகவும் உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்டோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Google

கொரோனா பெருந் தொற்றால்

# ரூ.19,500 கோடி சேமித்தது கூகுள்!

கலிபோர்னியா, மே 01

கொரோனா பெருந்தொற்றால் பணியாளர்கள் வீட்டிலிருந்தே பணியாற்றுவதால் கூகுள் நிறுவனம் 100 கோடி டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 19 ஆயிரத்து 500 கோடி ரூபாயை சேமித்துள்ளது.

கூகுள் நிறுவனத்தில் சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் பணியாற்றுவதற்காக மின்சாரம், அலுவலக பராமரிப்பு மற்றும் இதர செலவுகள் என்ற ரீதியில் பெரும் நிதியை கூகுள் நிறுவனம் செலவிடுகிறது.

இந்நிலையில், கொரோனா தொற்றால் கூகுளின் ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை பார்ப்பதால் இந்தச் செலவுகளை கூகுள் நிறுத்தியுள்ளது. இதனால், கடந்த காலாண்டில் 100 கோடி டொலர்களை கூகுள் சேமித்துள்ளது.

இதேவேளை, கூகுள் ஊழியர்களின் வீட்டிலிருந்து பணி செய்யும் காலம் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவுக்கு வரும் என்று அதன் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் சுந்தர் பிச்சை அறிவித்துள்ளார். (ஐ)

# மதத் திருவிழா கூட்டத்தில் நெரிசல்: இஸ்ரேலில் 44 பேர் பலி; பலர் காயம்!



ஜெருசலேம், மே 01

இஸ்ரேலில் யூத மதத் திருவிழா ஒன்றில் பக்தர்கள் அளவுக்கு மீறி கூடியதால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 44 பேர் பலியாகினர்.

வடக்கு இஸ்ரேலின் மௌண்ட் மெரான் என்ற பகுதியில் வருடந்தோறும் 'லாக் பா ஓமர்' நினைவு தினத்துக்காக அவரின் கல்லறை அமைந்துள்ள பகுதியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுவர்.

இதற்காக நேற்று சுமார் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் குறுகலான பகுதியில் கூடினர். இதனால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 44 பேர் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இவர்களில் பலர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்ட நெரிசலில் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல 6 ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

கொரோனா தொற்று காரணமாக கடந்த ஆண்டு இந்தத் திருவிழாவுக்கு தடை விதிக்கப்பட்டது. இந்த ஆண்டும் தடை விதிக்கவே அரசு திட்டமிட்டது. ஆனாலும், 60 வீதத்துக்கும் அதிகமான மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டு விட்டமையால் மட்டுப்படுத்தப்பட்ட மக்களுடன் திருவிழாவை நடத்த சுகாதார அமைச்சு அனுமதியளித்தது.

ஆனால், பெருந்திரளான மக்கள் கூடியமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "மோசமான இழப்பு. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்." என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# பலஸ்தீன பாராளுமன்ற தேர்தலை ஒத்திவைத்தார் ஜனாதிபதி அப்பாஸ்

கிழக்கு ஜெருசலேம், மே 01

மே 22 நடத்த திட்டமிடப்பட்டுள்ள பாராளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதாக பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட நகரமான கிழக்கு ஜெருசலேமில் தேர்தலை நடத்த இஸ்ரேல் நிராகரித்ததை மேற்கோளிட்டு, வாக்களிப்பதில் இருந்து விலக்கப்பட்ட ஜெருசலேமுடன் தேர்தலை நடத்த மாட்டோம் என்று அப்பாஸ் கூறினார்.

"ஆக்கிரமிக்கப்பட்ட ஜெரு சலேம் இல்லாமல் நாங்கள் தேர்தலுக்கு செல்லமாட்டோம். மேற்குக் கரை போலவே ஜெருச லேமிலும் தேர்தல்கள் வேண் டும்" என்று அவர் தொலைக் காட்சி உரையில் கூறினார்.

ஜெருசலேமில் தேர்தலை நடத்த வேண்டும் என்ற பலஸ்தீ னிய கோரிக்கைக்கு இஸ்ரேலிய தரப்பு பதில் அளிக்கவில்லை.

இஸ்ரேலிய தரப்பிலிருந்து பதில் கிடைக்காததால் ஏற் பட்ட ஏமாற்றத்தை ஐரோப்பிய ஒன்றியம் பலஸ்தீனிய தரப்பி னருக்கு தெரிவித்ததாக அப்பாஸ் மேலும் கூறினார்.



எவ்வாறாயினும் ஜெருச லேமில் தேர்தலை நடத்த இஸ்ரேல் அனுமதித்தவுடன், ஒரு வாரத்திற்குள் தேர்தல்களை நடத்துவதாகவும் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் உறுதியளித்துள்ளார்.

# பிரான்ஸில் இந்திய வைரஸுடன் முதல் தொற்றாளர் அடையாளம்!

பாரிஸ், மே 01

இந்திய வைரஸ் என்று அழைக்கப்படுகின்ற புதிய திரிபுக் கிருமி தொற்றிய நபர் ஒருவர் பிரான்ஸில் அடையாளம் காணப்பட்டிருக்கிறார். லொற் - எற் காரோனி பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே இந்திய வைரஸ் தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தொற்றுக்குள்ளான நபர் அண்மையில் இந்தியாவில் இருந்து திரும்பியவர் என்பது தெரியவந்துள்ளது. அவரது தொற்று மாதிரிகள் துளுசில் உள்ள தொற்று நோய் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டு இந்திய வைரஸ் உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அந்த நபருடன் தொடர்புடைய எவருக்கும் வைரஸ் தொற்றியதாக இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. அவருக்கு தீவிர நோய் அறிகுறிகள் எவையும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. பிரான்ஸில் இந்தியத் தொற்றாளர்கள் எவரும் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று நாட்டின் சுகாதார அமைச்சர் உறுதி செய்து ஓரிரு தினங்களில் முதலாவது தொற்றாளர் அடையாளம் காணப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.




# 100 கோடி தடுப்பூசிகளில் 0.3 வீதமே ஏழை நாடுகளுக்கு!

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

ஜெனிவா, மே 01

உலகளவில் 100 கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகள் இதுவரை போடப்பட்டுள்ள நிலையில் இவற்றில் 82 வீத தடுப்பூசிகள் உயர் மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஏழை நாடுகளில் இதுவரை வெறும் 0.3 வீத கொரோனா தடுப்பூசிகளே போடப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்த்துக்கல்லில் நடந்த சுகாதார மாநாடு ஒன்றில் மெய்நிகர் நுட்பம் வழியில் பங்கேற்றுப் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக மக்களை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பணக்கார நாடுகள் போட்டி போட்டு தடுப்பூசிகளைப் போடும் நிலையில் ஏழை நாடுகளுக்கு போதுமான தடுப்பூசிகள் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# உலகளவில் 15 கோடியை கடந்தது! கொரோனா பெருந்தொற்று பாதிப்பு

நியூயோர்க், மே 01

உலகளவில் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 கோடியை நேற்றுக் கடந்ததாக ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொரோனா மரணங்களும் 31 இலட்சத்து 61 ஆயிரத்து 637ஐ கடந்ததாகவும் அந்தப் பல்கலைக்கழகத்தின் தரவு தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை உலகளாவிய தொற்று நோய் தொடர்பாக புதுப்பிக்கப்பட்ட அறிவிப்பை ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக கணனி அறிவியல் மற்றும் பொறியியல் மையம் வெளியிட்டுள்ளது.

அந்தத் தரவுகளின்படி உலகளவில் கொரோனா தொற்றாளர் தொகை 15 கோடியே ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 206 ஆகவும், கொரோனா மரணங்களில் எண்ணிக்கை 31 இலட்சத்து 61 ஆயிரத்து 637 ஆகவும் பதிவாகியுள்ளது.

உலகில் மிக அதிகளவு தொற்று நோயாளர்கள் மற்றும் அதிக கொரோனா மரணங்களை பதிவு செய்த நாடுகளின் வரிசையில் அமெரிக்கா தொடர்ந்து முன்னணியில் உள்ளது. நேற்றுவரை அங்கு, 3 கோடியே 22 இலட்சத்து 83 ஆயிரத்து 801 தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 5 இலட்சத்து 75 ஆயிரத்து 70 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

தொற்று பாதிப்பில் அடுத்த இடங்களில் பிரேஸில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உள்ளன. (ஐ)

# நான்கு இலட்சம் கடந்தது பிரேஸிலில் தொற்று பலி

பிரேஸிலியா, மே 01

பிரேஸிலில் கொரோனா பலி எண்ணிக்கை 4 இலட்சத்தைக் கடந்தது.

இதுகுறித்து அந்நாட்டின் சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில், கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக 69,389 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து மொத்த பாதிப்பு எண்ணிக்கை ஒரு கோடியே 45 இலட்சத்து 90 ஆயிரத்து 678 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனாவால் மேலும், 3,001 பேர் பலியாகினர். இதன்மூலம் மொத்த பலி எண்ணிக்கை 4 இலட்சத்து ஆயிரத்து 186ஆக உயர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவில் தேசிய வெசாக் தினம் நிலைமையை அனுசரித்து நடத்த முடிவு

## பங்கேற்போர் தொகைக்கும் மட்டுப்பாடு நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 01

நயினாதீவில் எதிர்வரும் 23 தொடக்கம் 28ஆம் திகதி வரை நடக்கவுள்ள தேசிய வெசாக் நிகழ்வுகளை, தற்போதைய கொரோனா நிலைமையை அனுசரித்து நடத்த முடிவு எட்டப்பட்டுள்ளது. அத்துடன் நிகழ்வில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய வெசாக் கொண்டாட்டம் தொடர்பாக ஆராயும் முன்னேற்பாட்டு கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் புத்த சாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன தலைமையில், யாழ். மாவட்ட அரச அதிபரின் பங்குபற்றுதலுடன் நடந்தது.

இதன்போதே, மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும், தற்போது அதிகரித்து வரும் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட வர்களுடன் மிக அமைதியான முறையில் தேசிய வெசாக் நிகழ்வை கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது.



இந்த முன்னேற்பாட்டு கூட்டத்தில் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி முப்படைகளின் பிரதிநிதிகள், புத்தசாசன அமைச்சின் செயலாளர் அதிகாரிகள் மாவட்ட செயலக அதிகாரிகள் வேலணை பிரதேச செயலர் மற்றும் மதகுருக்கள் கலந்து கொண்டனர். (ஐ-3)

# பருத்தித்துறையில் விதிகளை மறந்து மரணசடங்கில் கூடியோருக்கு தனிமை

வடமராட்சி, மே 01

பருத்தித்துறை புலோலி மேற்குப்பகுதியில் கொரோனா கட்டுப்பாட்டுக்கான தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி மரணச்சடங்கில் இறுதி ஊர்வலத்தை நடத்தியவர்கள் பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்டினால் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

சமூக இடைவெளியைப் பேணாமலும் முகக்கவசங்கள் இன்றியும் நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்றுதிரண்டு பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக நின்று மது போதையில் மேளவாத்தியங்களை முழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொது சுகாதார பரிசோதகர் வழங்கிய அறிவுறுத்தல்களை கணக்கிலெடுக்காமலும், கடமைக்கு இடையூறு செய்ய முயன்றும் சிலர் நடந்து கொண்டனர்.

இவ்வாறு நடந்து கொண்ட மேள வாத்தியக்காரர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பலர் அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அத்துடன் கற்கோவளம் பகுதியில் அம்மன் கோயிலொன்றில் அனுமதியின்றி திருவிழா நடத்தி, இரவு நேரத்தில் நிகழ்ச்சிகளையும் அனுமதியின்றி மேற்கொண்டு, நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூட காரணமாக இருந்தவர்களும் அவர்களின் வீடுகளில் பொது சுகாதார பரிசோதகரால் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் பத்தாம் நாளில் மேற்கொள்ளப்பட்டு சுயதனிமைப்படுத்தல் காலம் 14 நாட்கள் முடிவுற்றபின் சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முல்லேரியா வைத்தியசாலை தொற்றாளர்களால் நிறைந்தது

கொழும்பு, மே 01

நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவது சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் முல்லேரியா வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை உச்ச அளவை எட்டியள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கிழக்கு ஆதார (முல்லேரியா) வைத்தியசாலையில் தற்போது தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை உச்ச அளவை எட்டியதாக வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் பிரியந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும், வைத்தியசாலையினுள் பிரணவாயுவுக்கு (ஒட்சிசன்) எவ்விதத்திலும் தட்டுப்பாடு இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

முல்லேரியா வைத்தியசாலையில் மருத்துவர்கள் மற்றும் பணிக் குழாமினருக்கு கொவிட் தடுப்பூசியின் இரண்டாம் செலுத்துகையை மேற்கொள்ளும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. இதில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# அரசியல் பழிவாங்கலை கைவிட்டு ஒன்றிணையவேண்டிய தருணமிது

## கரு ஜெயசூரிய அறிக்கை

கொழும்பு, மே 01

"நாடு எதிர்கொண்டுள்ள சவால்மிக்க நிலைமைக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதாக இருந்தால் அனைவரும் ஒரே தேசமாக இன, மத, அரசியல் பேதங்களை விட்டு ஒன்றாக கைகோக்க வேண்டும். இதற்கு முன்மாதிரியாக அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான பழிவாங்கல்களையும் நிறுத்தி அனைவருக்கும் நட்புறவான நேசக்கரங்களை அரசாங்கம் ஆரம்பமாக நீட்டவேண்டும்", இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றால் நாடு எதிர்கொண்டுள்ள சவாலை வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டியதன் தேவை குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு

நாட்டில் இடம்பெறுகின்ற சில சம்பவங்கள் தொடர்பில் எங்களுக்குள் பெரும் கவலையை ஏற்படுத்துகின்றன.



சத்திர சிகிச்சை ஒன்றுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஹறின் பெர்ணான்டோவின் சகோதரியை கடந்த சில தினங்களுக்கு முன்னர் பொலிஸூக்கு அழைத்து ஐந்து மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தியதியமையை ஒரு தார்மீக செயலாக கருத முடியாது. இது மனித உரிமையை மீறும் செயலாகும்.

இதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் விடயத்திலும் அவ்வாறான நிலைமையையே காணக்கூடியதாக இருக்கின்றது. ரிஷாத் பதியுதீனை கைதுசெய்யும் போது குறித்த துறையினர் செயல்பட்டிருக்கும் சம்பிரதாய விரோத செயலை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. நள்ளிரவு 2.00 மணியளவில் சபாநாயகருக்கும் அறிவிக்காமல், இவ்வாறான நடவடிக்கை மேற்கொண்டமை தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும்.

நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்பு உட்பட மக்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் முறையாக வாகனம் செலுத்தி, நாட்டினதும் மக்களினதும் நலனுக்காக தேவையான நடவடிக்கைகளை தாமதிக்காமல் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நாங்கள் ஒன்றுபட்டால் எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்கலாம். அதற்கான தலைமைத்துவத்தை ஜனாதிபதி வழங்கவேண்டும். அழிவடைந்த நாடுகள் கட்டியெழுப்பப்படுவது இந்த முறையிலேயே ஆகும் - என்றுள்ளது. (ஐ)


# மரண அறிவித்தல்

மலர்வு
04 - 05 - 1950



உதிர்வு
28 - 04 - 2021

## லோட்டன் லயனல் ராஜகுமார் (குமார்)

யாழ்.சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லோட்டன் லயனல் ராஜகுமார் அவர்கள் 28-04-2021 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான J.K. லோட்டன் – மனோன்மணி தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா – பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவி (விமலா) அவர்களின் அன்புக் கணவரும், கேமச்சந்திரன் (கேமா– லண்டன்), தர்சினி, சுபாசினி (சுபா– கனடா), செல்வச்சந்திரன் (செல்வா– லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேமலதா (லதா– லண்டன்), கண்ணதாசன்(கண்ணன்), நாகேஸ்வரன்(கனடா), கஜந்தரூபி (ரூபி – லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மேரி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சறோஜினி, டெபோரா (அவுஸ்திரேலியா), ராஜினி (அவுஸ்திரேலியா), எமிலி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான லூதர், லியோ ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சீவநாயகம் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சற்குணானந்தன், ஜெயரட்ணம் (அவுஸ்திரேலியா), யக் றொபேட்சன் (அவுஸ்திரேலியா), பிறேமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஸ்வின் (லண்டன்), அஷானா (லண்டன்), மதுஷா, திருஷா, தரணிகா, அம்சன் (கனடா), அர்சன் (கனடா), அய்ஷா (லண்டன்), அவந்திகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 02.05.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10:00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**கேமா - 00447944002835**
**செல்வா - 00447539933074**
**தர்சினி - 0776057037, 0773838501**
**கண்ணன் - 0771024448**
**சுபா(மகள்) - 001416844-4189578**

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும்

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை



**யாழ்ப்பாணம்,மே 01**

**முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோரை நினைவு கூர இந்த அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் மக்கள், இறந்துபோன தமது உறவுகளை, தங்களோடு வாழ்ந்த மக்களை, தங்களுடன் சேர்ந்து இருந்த உறவுகளை கண்ணீர் சிந்தி நினைக்கின்ற மே- 18 அன்று முள்ளிவாய்க்கால் நினைவுநாளை நினைவு கூர இந்த அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை தடுக்க, தவிர்த்துவிட முயன்று வருகிறது. இது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய அநியாயமாகும்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு கோரிக்கை விடுக்கின்ற மதத்தலைவர்கள் அல்லது இந்தத் தாக்குதலுக்காக விடுமுறை வழங்கி பாராளுமன்றம் வரைக்கும் அஞ்சலி செலுத்துகின்ற இந்த நாட்டின் தலைவர்கள் ஒரு நியாயமான, நீதியாக ஜனநாயகத்தை நேசிப்பவர்களாக இருந்தால் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட வேண்டும்.

பகிரங்கமாக தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கு மன்னிப்பு கேட்டு உயிரிழந்தோரை நினைவு கூர்ந்து, அஞ்சலி செலுத்த அனுமதி வழங்குவதன் மூலமே அவர்கள் தங்களை மனிதர்களாக இந்தப் பூமிப்பந்தில் அடையாளப்படுத்த முடியும்.

ஆகவே, இது ஒரு முக்கியமான தமிழர்களுடைய வரலாற்றில் எல்லோராலும் பார்க்கப்படுகின்ற, எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு விடயம். உலகத்திலே இருபதாம் நூற்றாண்டில் மனிதகுலத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரும் பேரழிவாகும். இதன் நினைவுகூரலை தடுப்பது பௌத்த மதத்தை நேசிக்கின்ற, புத்த பெருமானை வணங்குகின்றவர்கள் புரியும் ஒரு காரியமல்ல.

ஆகவே, அரசாங்கம், ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவுகூர எவ்வாறு அனுமதி வழங்கினார்களோ அதேபோன்று கடந்த காலங்களில் 2016ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் இந்த வணக்கத்தை முள்ளிவாய்க்காலில் சென்று உணர்வுபூர்வமாக மேற்கொண்டார்கள். அவ்வாறு இந்த வருடமும் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்த இந்த அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-03)

# வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான தனிமைப்படுத்தல் காலத்தில் மாற்றம்

கொழும்பு,மே.01

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தருகின்றவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலத்தை நீடிக்க யோசனைகள் உள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து வருவோர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பதை அடையாளம் காண்பதற்கு இந்த நடவடிக்கை உதவும் என சுகாதார அமைச்சின் பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் எஸ். எம். ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: 'வெளிநாட்டிலிருந்து வருகை தருகின்ற மக்களுக்கான தனிமைப்படுத்தல் காலம் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படும்.

நாங்கள் தற்போது அதற்கான வேலையையே செய்கின்றோம். தனிமைப்படுத்தல் காலத்தில் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் பாதிக்கப்பட்ட நபரை அடையாளம் காணத் தேவையான நேரத்தை இதனூடாக பெறுவதே நோக்கமாகும்.

இதேவேளை, சுகாதாரத்துறையினர் வெளியிட்டுள்ள கொரோனா கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்களை பொதுமக்கள் பின்பற்றவில்லையெனின் பயணக் கட்டுப்பாடுகள் நாடளாவிய ரீதியில் விதிக்கப்பட வேண்டும்- என்றார். (எ)

# 8 கிலோ கஞ்சாவுடன் யாழில் மூவர் சிக்கினர்

பருத்தித்துறை, மே 01

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த மூவர் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய விஷேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த 20, 31 மற்றும் 38 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து 6 கிலோ கிராம், 2 கிலோ கிராம் மற்றும் 500 கிராம் என 8 கிலோ 500 கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோவும், மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் மூவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர். (எ)

# கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் அரசின் நடவடிக்கைகளில் அதிருப்தி!

## திஸ்ஸ விதாரண விரக்தி

கொழும்பு,மே.01

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தற்போது முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் அதிருப்தியளிக்கின்றன. கொரோனா வைரஸின் சமூக பரவலைத் தடுக்க பொதுமக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து பாராளுமன்றம், சுகாதாரக் குழுவுக்கு நான்கு முறை முன்வைத்த யோசனைகள் நிராகரிக்கப்பட்டன.

பூகோள வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த விஞ்ஞான ரீதியிலான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே தீர்மானம் எடுக்க வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர், ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சடுதியாக அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்று குறித்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

புத்தாண்டுக்குப் பிறகு கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவலடைந்துள்ளது. கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்பதால் பி.சி.ஆர். பரிசோதனைகள் குறைக்கப்பட்டதுடன், கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் அனைத்தும் அலட்சியப்படுத்தப்பட்டன. சுகாதார பாதுகாப்பை முறையாகப் பின்பற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் தளர்த்தியது.

பொதுமக்கள் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும், சமூக இடைவெளியைப் பேண வேண்டும் என தற்போது குறிப்பிடுவதால் எவ்வித பயனும் ஏற்படாது. கொரோனா வைரஸ் சமூகப் பரவலடைந்து விட்டது. புத்தாண்டு காலத்தில் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் தற்போதைய நெருக்கடி நிலை தோற்றம் பெற்றிருக்காது. இவ்விடயத்தில் சுகாதார அமைச்சும் பொறுப்பற்ற வகையில் செயல்பட்டுள்ளது.

முககவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல், மக்கள் பொது இடங்களில் ஒன்று கூடுவதை முற்றிலும் தடுத்தல், பொது போக்குவரத்து சேவையில் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கடுமையாக பின்பற்றுதல், உள்ளிட்ட விடயங்களில் சிறந்த சுகாதார பாதுகாப்பு கொள்கைகளை பின்பற்றும் திட்டத்தை பாராளுமன்ற சுகாதார குழுவுக்கு நான்கு முறை சமர்ப்பித்தேன். அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அத்தீர்மானங்கள் செயல்படுத்தப்படவில்லை.



கொரோனா வைரஸ் விவகாரத்தில் சுகாதார அமைச்சின் செயல்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன. சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கொரோனா வைரஸ் தாக்கம் சமூகப் பரவலடையவில்லை என்று ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டுக் கொண்டு முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்காமலிருந்தார். புத்தாண்டு காலத்திலும் சுகாதார அமைச்சு பொறுப்பற்ற வகையில் செயல்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட பி -117 என்ற வைரஸே தற்போது நாட்டில் இனங்காணப்பட்டுள்ளது. இது மிகவும் அபாயகரமானது. கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்தும் அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் அதிருப்தியளிக்கின்றன. ஆகவே, பொது மக்கள் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும்- என்றார். (எ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# சஹ்ரானின் சகோதரன் ரில்வானுக்கு வெடிமருந்துகள் வழங்கியவர் கைது

கொழும்பு,மே 01

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ராலிக் ராஸா என்பவர் 2018 ஆம் ஆண்டு சஹ்ரானின் சகோதரன் மொஹமட் ரில்வான் மேற்கொண்ட வெடிமருந்து பரிசோதனைக்காக வெடிமருந்துகளை வழங்கியமை தெரியவந்துள்ளது.

தீவிரவாத ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

28 வயது காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த ராலிக் ராஸா எனும் நபர் கல்முனை பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் தீவிரவாத ஒழிப்புப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமைய இந்த சந்தேக நபரை மீண்டும் அழைத்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. (எ)

## சீன பாதுகாப்பு அமைச்சரின்

# வாகன தொடரணியின்போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தவர் கைது

கொழும்பு,மே.01

சீன பாதுகாப்பு அமைச்சரின் வாகனத் தொடரணியின் போது, பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த 31 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு நோக்கி சீன பாதுகாப்பு அமைச்சரின் வாகனத் தொடரணி சென்று கொண்டிருந்தவேளை, பொரளையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

மேலும், சந்தேகநபரால் எடுக்கப்பட்ட காணொலியொன்றும் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



பங்களாதேஷுடனான டெஸ்ட்:

# இலங்கை தடுமாற்றம்!

கண்டி, மே 01

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்க 469 ஓட்டங்களை எடுத்துள்ளது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. நேற்று முன்தினம் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமானது.

கண்டியில் நடக்கும் இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது. முதல்நாள் ஆட்டம் முடிவில், ஒரு விக்கெட் இழப்புக்கு 291 ஓட்டங்களை எடுத்திருந்தது.

திரிமன்னே 131 ஓட்டங்களுடனும், ஒஸத பெர்னாண்டோ 40 ஓட்டங்களுடனும் இருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பமானது.

மேலதிகமாக 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் - 140 ஓட்டங்களுடன் திரிமன்னே ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அஞ்சலோ மத்தியூஸ் 5 ஓட்டங்களுடனும், தனஞ்சய டி சில்வா 2, பதும் நிஷங்க 30 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

மறுமுனையில் 221 பந்துகளை எதிர்கொண்டு 81 ஓட்டங்களைப் பெற்ற ஒஸத பெர்னாண்டோவும் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நிரோஷன் டிக்வெல்ல சற்று அதிடியாக ஆடினார். இதனால், இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை சற்று வேகமாக அதிகரித்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 469 ஓட்டங்களை இலங்கை அணி எடுத்தது.

நிரோஷன் டிக்வெல்ல 64 பந்துகளில் 64 ஓட்டங்களுடனும், ரமேஷ் மெண்டிஸ் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் தஸ்கின் அஹமட் 3 விக்கெட்களையும, ஹசன் மிராஷ், சொரிபுல் இஸ்லாம், தையுல் இஸ்லாம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# பஞ்சாப் கிங்ஸிடம் வீழ்ந்தது பெங்களூர்

அஹமதாபாத், மே 01

ஹர்பிரீத் பிராரின் அசத்தல் பந்துவீச்சும் கே.எல். ராகுலின் அதிரடி ஆட்டமும் கைகொடுக்க பெங்களூர் அணியை 34 ஓட்டங்களால் வெற்றி கொண்டது பஞ்சாப்.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்று அஹமதாபாத்தில் நடந்த போட்டியில் பஞ்சாப் கிங்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரின் அணித் தலைவர் விராட் கோலி முதலில் பந்து வீச்சைத் தெரிவு செய்தார்.

துடுப்பெடுத்தாடிய பஞ்சாப்புக்கு, அணித் தலைவர் கே.எல். ராகுல் பிரப்ஷிம்ரன் சிங் இணை தொடக்கம் கொடுத்தது. 7 ஓட்டங்களுடன் சிங் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களம் புகுந்தார் கிறிஸ் கெய்ல். ராகுலுடன் இணைந்து பெங்களூரின் பந்துகளை நாலாபுறமும் பறக்க விட்டார். 24 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் என வெளுத்து வாங்கிய கெய்ல் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த, நிக்கொலஸ் பூரன் 0, தீபக் ஹூடா 5, சாருக்கான் 0 என்று வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்ப பஞ்சாப் சற்று தடுமாறியது. ஆனால், ராகுல் தனது அதிரடியை நிறுத்தவில்லை.

இந்நிலையில், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப் அணி.

கே. எல். ராகுல் 57 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களை விளாசி 91 ஓட்டங்களை குவித்தும் ஹர்பீரித் பிரார் 17 பந்துகளில் ஒரு பௌண்ட்ரி 2 சிக்ஸர்களுடன் 25 ஓட்டங்களை எடுத்தும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பெங்களூரின் பந்துவீச்சில் கெய்ல் ஜமைசன் 2 விக்கெட்களையும், டானியல் சாம்ஸ், யுவேந்திர சாகல், சப்ராஸ் அஹமட் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெங்ளூருக்கு சற்று இலகுவான இலக்கே என்றபோதும் ஆரம்பமே தடுமாறியது.

விராட் கோலி, படிக்கல் இணை தொடக்கம் கொடுத்த நிலையில், படிக்கல் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ராஜத் படிதார் சற்று நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 34 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 35 ஓட்டங்களை எடுத்த கோலி ஹர்பீரித்தின் பந்தில் வீழ்ந்தார்.



31 ஓட்டங்களுடன் நிதானித்த படிதாரை ஜோர்தான் வெளியேற்றினார். அடுத்து வந்த வீரர்களை ஹர்பீரித், ரவி விஸ்னோய் நிலைக்க விடவில்லை. இதனால் பெங்களூர் தடுமாறியது. மக்ஸ்வெல் 0, வில்லியர்ஸ் 3, சப்ராஸ் அஹமட் 8, டானியல் சாம்ஸ் 3 என ஆட்டமிழந்தனர்.

எனிமும் ஜமைசன், ஹர்சல் பட்டேல் இணை சற்று நிதானித்து ஆடியது. பட்டேல் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் என்று அதிரடி காட்டி 13 பந்துகளில் 31 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

ஜமைசன் 16 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் 20 ஓவர்கள் நிறைவுக்கு வந்தன. பெங்களூர் 8 விக்கெட்கள் இழப்புக்கு 145 ஓட்டங்களையே எடுத்தமையால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் அசத்திய ஹர்பீரித் பிரார் ஓர் ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 3 விக்கெட்களையும், ரவி விஸ்னோய் 2 விக்கெட்கயையும் வீழ்த்தினர்.

ஹர்பீரித் சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஐ)

# ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு மாற்றப்படும் உலக கிண்ணம்?




புதுடில்லி, மே 01

கொவிட்-19 அச்சுறுத்தல்கள் குறையவடையவில்லை என்றால் எதிர்வரும் ஒக்ரோபர் 18 முதல் நவம்பர் 15 வரை இந்தியாவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட இருபது-20 உலகக் கிண்ண போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு மாற்றப்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

இந்திய கிரிக்கெட் சபை 2021ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபது -20 உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கான நம்பிக்கையை கைவிடவில்லை. எனினும், கிண்ணத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு மாற்றுவது தற்செயலான திட்டம் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

போட்டிகள் அவ்வாறு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்தப்பட்டாலும் தொகுப்பு உரிமைகள் இந்திய கிரிக்கெட் சபையிடமே இருக்கும்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுநோய்களின் அண்மைய எழுச்சிக்கு முன்னர் மும்பை, புதுடில்லி, சென்னை, கொல்கத்தா, பெங்களூர், ஐதராபாத், தர்மசாலா, அஹமதாபாத் மற்றும் லக்னோ ஆகிய ஒன்பது இடங்களில் இருபது-20 உலகக் கிண்ண போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டிருந்தன.

எனினும், கொரேனா இரண்டாம் அலை தாக்கத்தால் போட்டி நடைபெறுவது சந்தேகமாகியுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்த காலம் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-மே தின சிறப்பு



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்-மே-01
நடிகர் அஜித்குமார் சிறப்பு



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்-இளையோரின் வாசிப்பு பழக்கம் வீழ்ச்சியுறுகின்றதா



10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஸ்ரீ tv**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org